REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER


T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 21 | சுன்னாகம், விகிர்தி மாசி கரு, 25-2-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 30

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள்
விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

## யுத்தப் பேச்சு?

### கவலை தரும் அமெரிக்கா

### அட்லி மீது ஸ்டாலின் பலத்த கண்டனம்

### உலக விவகாரம்

**கோரியாப் போரானது** உலக யுத்தத்தை யுண்டாக்கி விடுமோ என மக்கள் பயந்து கொண்டிருக்கையில், உலக யுத்தத்தைத் தவிர்க்க முடியுமென ஸ்டாலின் கூறியிருக்கின்றார்.

சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சங்கம் புதியதோர் உலக யுத்தத்தைக் கிளப்பிவிடுவதற்கான ஒரு சாதனமாய் மாறிக்கொண்டிருப்பதாக ஸ்டாலின் கருதுகின்றார்.

காஷ்மீர் விவகாரத்தைப் பற்றி அந்நாட்டுப் பிரதமரான ஷேக் அப்துல்லா அவர்கள் பேசும்போது ஐக்கிய நாடுகள் சங்கமானது சர்வதேசச் சதி வேலைகளுக்கு நிலைக்களமாக இருந்து வருகின்றதெனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிரிட்டனையும் அமெரிக்காவையும் யுத்தவெறி பிடித்துள்ள நாடுகள் என வன்மையாகக் கண்டித்துள்ள ஸ்டாலின், அமெரிக்க கோஷ்டி நாடுகள் ஐக்கிய நாடுகள் சங்கத்தைத் தமது ஆதிக்கத்துள் வைத்துள்ளனர் எனவும் இச்சங்கம் இப்போது உலக ஸ்தாபனமாக விளங்கவில்லையெனவுங் கூறினார்.

இதுவரைகாலமும் அமெரிக்காவின் யுத்தமுஸ்தீப்புக்களைக் கண்டித்துவந்த ஸ்டாலின் இம்முறை பிரிட்டன்மீதும் பாய்ந்திருப்பதால் இதில் ஏதோ முக்கிய காரணம் இருந்தேயாக வேண்டும். ருஷியாவின் எதிர் காலத்தில் பிரிட்டனுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டிருப்பதால் பிரிட்டனின் போக்கை நன்றாகத்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)



பிரிட்டனையும் அமெரிக்காவையும் சமீபத்தில் வன்மையாகக் கண்டித்துள்ள ஸ்டாலின், பிரதமர் அட்லி ருஷியாவைப் பற்றிப் பொய் சொல்லிப் பிரிட்டிஷ் மக்களை ஏமாற்றி வருகின்றார் எனவுந் தெரிவித்தார். அமெரிக்கா ஏற்பாடு செய்துவரும் புதிய உலக யுத்தத்திற் பிரிட்டிஷ் மக்களையும் மாட்டிவைக்கப் பிரதமர் அட்லி விரும்புகின்றார் எனவும் ஸ்டாலின் நெருப்பெடுத்திருக்கின்றார்.

## வறிய பிள்ளைகள் விளையாட்டுப் பொருள்களா?

### தேசியக் கொடியும் பிரதமர் நிலையும்

### நமது அரசியல் நிருபர்

**பிரதிநிதிகள் சபையின்** சம்பிரதாயத்தைக் கண்ணியப்படுத்தவேண்டுமென்ற ஆசை இலங்கைப் பிரதிநிதிகள் சபைக்கு இல்லையென்பது சபாநாயகரைத் தெரிந்தெடுத்த விஷயத்தில் அம்பலமாகி விட்டது. அரசாங்கக் கட்சிக்கோ அன்றேல் எதிர்க் கட்சிக்கோ விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மருந்துக்குங் காண்பதற்கில்லை.

அந்தவாரம் (13-2-51) பிரதிநிதிகள் சபை கூடிய போது திருத்தம்பெற்ற கல்வி அறிக்கை சபையில் நிறைவேற்றப்பட்டது. அவசர அவசரமாகப் புதிய கல்வி அறிக்கையை நிறைவேற்றக் கூடாதென்பதற்கு வவுனியாப் பிரதிநிதி ஸ்ரீ சுந்தரலிங்கம் அவர்கள் பின்வரும் காரணங்களைக் கூறினர்.

1. இன்று நாட்டின் கல்வி நிலை அல்லோல கல்லோலமாக இருக்கின்றது; புதிய அறிக்கை நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடும்.

2. ஐந்துவருடத்துள் கட்டாயமாகக் கல்வி அறிக்கையில் மீண்டும் திருத்தங்கள் ஏற்பட்டே தீரும்.

3. இலவசக் கல்வியின் நோக்கத்தைப் புதிய அறிக்கை நன்றாகப் பாதிக்கின்றது.

புதிய கல்வி அறிக்கையானது இலங்கையிலுள்ள சகல பிள்ளைகளையும் அரசாங்கத்தின் விளையாட்டுப் பொருள்களாக மதித்திருப்பதுடன் ஏழைப் பிள்ளைகள் விறகு வெட்டுவதற்கும் தண்ணீர் அள்ளுவதற்குமே உகந்தவர்களெனப் பட்டை நாமஞ் சாத்தியிருக்கின்றதெனக் காலிப்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் திட்டம்

### 2,667 கோடி ரூபாய்

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு உதவ வகைதேடும் கொழும்புத்திட்ட மகாநாடு சமீபத்திற் கொழும்பில் நடைபெற்றது.

தெற்கு, தென்கிழக்கு ஆசியாவின் அபிவிருத்திக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆறு வருட திட்டத்தினால் கைகூட இருக்கும் சில பலன்கள் வருமாறு:

விவசாய நிலயத்தில் 13,000,000 ஏக்கர் ($3\frac{1}{2}$ சத விகிதம்) விஸ்தரிப்பு, உணவு—தானிய உற்பத்தியில் 6,000,000 தொன்கள் (10 சத விகிதம்) அதிகரிப்பு; மின்சாரத்தில் 1,000,000 கிலோ வாட்டுகளுக்கு மேல் (67 சத விகிதம்) உயர்வு என்பன.

உலகிற் பிறக்கும் பிரதி மூன்று குழந்தைகளில் ஒன்று தெற்கு, தென்கிழக்கு ஆசியாப் பிரதேசத்திலே பிறக்கிறது. ஏற்கனவே இந்தப் பிரதேசத்தில் 57 கோடி மக்கள் வசிக்கின்றார்கள். இத்தொகை 1970-ம் வருடத்திற்குள் 72 கோடியாகப் பெருகிவிடும்.

மேல் நாடுகளின் பெரிய புரட்சிகரமான உற்பத்தி முறைகள் எல்லாம் இப் பிராந்தியத்திற்கு வந்தடையவில்லை. இன்னும் விவசாயம் பிற்போக்கான முறைகளிலேதான் நடைபெறுகின்றது. கைத்தொழில்கள் வெகு சொற்பம்.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## குண சித்திர ஆராய்ச்சி!

### - மேயர் தெரிவிற் சமரச முடிவு -

### நமது நிருபர் கடிதம்

யாழ்ப்பாணம், 23-2-51

**யாழ்ப்பாணத்து** மக்களின் குண சித்திரத்தை ஆராய்ந்து முடிவு செய்வதற்குச் சேர் சிற்றம்பலம் காடினர் சகல விதத்திலும் தகுதிவாய்ந்தவர். சமீபத்திற் சம்பத்திரிசியார் கல்லூரி ஆண்டுக்கு அளித்த உபசாரணையின்போது யாழ்ப்பாணத்தவர்களைப்பற்றி அவர் தெரிவித்த அபிப்பிராயத்தை எவருந் தட்டிக்கழிக்க முடியாது. தாம் செய்வது பிழையென்பதை நன்கு உணர்ந்த பின்னரும் யாழ்ப்பாணத்தவர்கள் அதற்குப் பச்சாத்தாபப்பட்டுத் திருந்திநடந்துகொள்ளுவதில்லையென அவர் படித்த பெரிய மனிதர்கள் இருந்த அக்கூட்டத்திற் கூறியிருந்தார். இதே தவறுதான் அரசியற்றுறையிலும் யாழ்ப்பாணத்தில் நடந்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களும் கல்லூரியாற் கௌரவிக்கப்பட்டார்.

### சங்கடம் நீங்கிற்று

அநேக வாரங்களாக இழுபட்டுக்கொண்டிருந்த யாழ்ப்பாணத்து மேயர் தெரிவு சம்பந்தமான சிக்கல் இப்போது தீர்ந்துவிட்டது. சேர் காடினர் கூறியது போலத் தாங்கள் செய்த தவறுகளை உணர்ந்த பின்னர் ஒரு சில நகர சபை அங்கத்தவர்கள் பச்சாத்தாபப்பட்டிருப்பார்களோ தெரியவில்லை.



உலக யுத்தத்தைத் தவிர்க்க முடியுமென ஸ்டாலின் சென்ற வாரம் தெரிவித்திருந்தார். இன்று ருஷியாவிலிருந்துதான் உலகிற்கு அபாயம் வருகின்றதென அமெரிக்கா நம்புகின்றது.

யாழ்ப்பாண நகர நிர்வாகத்தில் எழுந்த சங்கடத்தை ஸ்தல ஸ்தாபன மந்திரியாரும் பிரதமரும் தீர்த்து வைத்திருக்கின்றனர் என்பதையறிந்து வரியிறுப்பவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

மேயர் தெரிவிற் பங்குபற்ற மறுத்த ஆறு அங்கத்தவர்களும் இனி இவ்விஷயத்தில் முட்டுக்கட்டை யிடுவதில்லையெனக் கூறியுள்ளனர். எனவே, மேயர் பொன்னம்பலம் மீண்டும் அப்பதவியை வகிக்கப் போகின்றார். போட்டியின்றி ஆளை விடக்கூடாதென்பதற்காகத் தங்களில் ஒருவரைப் போட்டிக்கு நிறுத்தக் கூடுமெனத் தெரிகின்றது.

ஆறு அங்கத்தவர்களும் இப்படியான ஒரு சமரசத்துக்கு உடன்பட மறுத்தால் மந்திரியார் சபையைக் கலைத்திருப்பார். அப்படியாயின் சகல அங்கத்தினரும் புதிய தேர்தலிற் போட்டியிட முடியாத நிலைமையேற்பட்டிருக்கும். நகரசபைகள் தேர்தற்சட்டத்தின் பிரகாரம் இத்தொல்லையினின்றுந் தப்பிக்கொள்ளவே குறித்த அங்கத்தினர் கொழும்புச் சமரசத்துக்கு உடன்பட்டிருக்கின்றனரென்றே கருத வேண்டியிருக்கின்றது.

மேயர் பொன்னம்பலம் இம்முறையும் பதவியில் இருந்தால் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அவர் தமது செல்வாக்கைப் பிரயோகிப்பாரென்ற பயமே இவ்வளவு சிக்கலுக்குக் காரணமெனக் கருதுபவர்களும் யாழ்ப்பாணப் பட்டினத்தில் இருக்கின்றனர்.

### தோழர் ஞாபகம்

**காலஞ்சென்ற** வழக்கறிஞர் தோழர் தர்மகுலசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக, ஒரு வாசிகசாலை யாழ்ப்பாணம் பஸ் நிலயத்துக்கருகில் நிறுவப் படுகின்றது. இவ் வாசிகசாலையின் அஸ்திவாரக் கல்லை மேயர் பொன்னம்பலம் அவர்கள் சமீபத்தில்நாட்டினர்.

### யாழ்ப்பாணக் கல்லூரி

**வட்டுக்கோட்டையிலுள்ள** யாழ்ப்பாணக்கல்லூரி அடுத்த தவணையிலிருந்து இலவசக்கல்வித் திட்டத்துக்குள் அமைந்துகொள்ளும். இக் கல்லூரியின் தலைவர் வண. எஸ். கே. பங்கர் அவர்களின் தேகசுகம் நன்றாக இல்லாதபடியால் அவர் அடுத்த மாதத்திலிருந்து ஒரு வருட லீவுபெற்றிருக்கின்றார்.

### தமிழ் விழா மலர்

**தமிழ்த் திருவிழாவை** முன்னிட்டுத் தமிழ் விழா மலர் ஒன்று வெளியாகுமென்ற செய்தி தமிழ் மக்களிடையே மிகுந்த ஆனந்தத்தை உண்டாக்கியிருக்கின்றது.

சென்னை, திருச்சி, கோயமுத்தூர் போன்ற இடங்களிலிருந்துந் தமிழ் அன்பர்கள்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

## ஊர் வதந்தி

### கொண்டோடி

- சுதந்திர இலங்கையில் இப்போது 62,000 பேருக்கு வேலையில்லையாம்.
- வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தவண்டையடிக்கின்றதாம்.
- இதற்காக அரசாங்கத்துக்குப் பிரதி வருடமும் 60 இலட்சம் ரூபாய்க்குத் துண்டு விழுகின்றதாம்.
- துண்டு போடுவதிற் பொது சனங்களுங் கை தேர்ந்தவர்களாம்.
- பொதுத் தேர்தல்களிலும் பிற தேர்தல்களிலும் இவர்களுக்குத் துண்டு போட்டுப் பழக்கமாம்.
- புதிய பொதுத்தேர்தலின் போது சிங்கள மொழியும் நன்கு அடிபடுமாம்.
- சிங்களத்தை அரசாங்க மொழியாக்குவதை ஆதரித்தே வாக்குத் துண்டுகளைப் போடவேண்டுமாம்.
- இவ் வாக்கு வாதத்தைப் பல்கலைக் கழகத்துத் தலைமைப் பேராசிரியரே கிளப்பியிருக்கின்றாராம்.
- சிங்களப் புலவர்கள் கூடிய கூட்டத்திலேயே பேராசிரியர் இப்பிரச்சினையைக் கிளப்பினாராம்.
- குடியரசுக்கட்சித்தலைவர் சில்வா அவர்களும் ஒரு பிரச்சினையைக்கிளப்பியுள்ளாராம்.
- சனத்தொகையில் ஐந்துசதவிகிதமானோருக்கே ஆங்கிலந் தெரியுமாம்.
- இந்த அழகில் ஆங்கிலம் ஏன் அரியணையில் ஏறவேண்டுமாம்.
- ஆங்கிலம்படித்து அடி நுனி கண்டவர்களுக்கு இதைக் கேட்டவுடன ஐந்துங் கெட்டு அறிவுங்கெட்டுவிட்டதாம்.
- சேர் காடினர் ஆங்கிலம் படித்து அலைகடலுக்கப்பாலும் சென்று திரும்புகின்றாராம்.
- அலைவீசும் உலகிலே யாழ்ப்பாணம்ஒருசிறந்த இடமாம்.
- சேர் காடினரே யாழ்ப்பாணத்தில்இதைக்கூறினாராம்.
- யாழ்ப்பாணத்து மண்ணுந் தண்ணீரும் தேகத்துக்கு நல்லனவாம்.
- லேடி காடினரே இக் கூற்றுக்கு ஆதாரமாம்.
- இச் சிங்கள அம்மையார் யாழ்ப்பாணம் வந்த 11 தினங்களில் 7 றாத்தல் நிறை கூடியுள்ளாராம்.
- நிறை கூடுபவர்கள் நிலையிலே தளம்புவதில்லையாம்.
- யாழ்ப்பாணத்தவர்கள் நிலைமையை அறிந்து இருந்துவதில்லையாம்.
- அரசியல் வாழ்விலும் இவர்கள் இம்மாதிரியே தவறு செய்கிறார்களாம்.
- யாழ்ப்பாணத்தவர்கள் திருந்தி நடந்தால் இலங்கை ஓரே சமுதாயமாகச் சிறந்து விளங்குமாம்.
- சீமெந்துத் தொழிற்சாலையும் இருந்திடக்கின்றதாம்.
- இத் தொழிற்சாலையைச் சரியான முறையில் நிறுவப்பட்ட ஒரு சபையின்நிர்வாகத்தில் விடவேண்டுமாம்.
- வாசிகசாலைகளை நிறுவிச் சிலர்சேவைசெய்கின்றாராம்.
- சேவையென்றுசொல்லிக்காசடிப்பதும் ஒருசேவையாம்.
- காசடிக்கத் தெரியாதவர்கள் வாசிகசாலைகளிற் பல்லிளித்துப் பேசுவார்களாம்.
- பல்லிளித்துப் பேசினால் அது நகைச்சுவையாம்.
- ஆறுமுக நாவலரின் நாவன்மையையும் நகைச்சுவையுடன் பேசலாமாம்.
- நாவலரின் நாவன்மையும் நகைப்புக்கிடமாகிவிட்டதாம்.
- இடங்கொடுத்தாற் பத்திரிகைக்காரர் மடங்கட்டி விடுவார்களாம்.
- கல்லெறி படும்போது பத்திரிகை நிருபர்கள் மடத்திற் படுத்து உறங்கலாமாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 6628**

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரவீதி

**வேலுப்பிள்ளை சோமசுந்தரம்**
வழக்காளி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி

**யுவாக்கிம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் (காலஞ்சென்ற பேனுட் யுவாக்கிம்பிள்ளை கைம்பெண் விக்ரோரியாப்பிள்ளையின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 537ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவ காரனாகவும்)** எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6628-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள், 1951-ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மாதம் 19-ந் திகதி (19-3-51) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 4297-50-ம், இதில் ரூபாய் 3000-க்கு 22-5-50 திகதி தொடக்கம் 24-7-50 திகதி வரைக்கும் 100-க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 243-97 சதம்.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி சண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூரிறை "வேலாசித்தறை டேவிற் றோட் அல்லது பனக்தெரு வேலாசித்தறை நீலகுட்டித்தறை படையாண்டளவு வேலாசித்தறை" இரு காணிகள் ஒருங்கு சேர்ந்த நிலப்பரப்பு 13-ம் குளி 5½ம், கல்வீடும், கிணறுகளும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு யேம்ஸ் இராசையாவுக்கும் பங்காளருக்கும், விக்ரர் யோசேப்புக்குமுரிய ஆதனங்கள்.. வடக்கு கோயில் றோட்டு மேற்கு, பீ. யுவாக்கிம்பிள்ளையின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு, யே. யேம்சுக்கும், கவுரியலுக்கும் யோன் கிறிசோஸ்ரம் பெண்ணுக்குமுரிய ஆதனங்கள். இதில் சொரியலாய் அரைவாசியும் அதற்குரியவைகளும். முற்பதிவு D $\frac{170}{83}$.

2. மேற்படி கரையூரிறை 'குடியிருப்பும், விறிகுடியிருப்பும்' நிலப்பரப்பு ஐந்தரை ($5\frac{1}{2}$)யும், கல்வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கும், வடக்கும் றோட்டு. மேற்கு, சந்தியாகுப்பிள்ளை சவரிமுத்துவுக்குரிய ஆதனம். தெற்கு, யோன் பெண் மேரிப்பிள்ளையின் ஆதனம். இதில் காணியிலும் கிணற்றிலும் மற்றும் பயிர்களிலும் சொரியலாய் அரைவாசியும், வடக்கறையும் கிழக்கு விறுந்தையும் சிந்தமாகவும். முற்பதிவு: D $\frac{158}{222}$.

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை**
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை, 6-2-51 [4241]


சகல பயிர்களுக்கு

# CCC பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனாக

**நாங்கள்**

# C C C

# கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

**கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி,**
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் CCC கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

**The Colombo Commercial Company,**
LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4223]

★ மலையின் இயற்கைக் காட்சியைக் காட்டிய புலவர் அந்நாட்டையுடைய தலைவனையும் எம்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார்.

# சங்க காலப் புலவர்கள்

## இயற்கை தரும் இன்பக் காட்சி

பண்டித புலவர்
— த. வடிவேலு —

சங்ககாலப் புலவர்கள் உள்ளதை உள்ளபடியே கூறி இன்பம் அநுபவிக்குந் தன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் தாம் கண்ட இயற்கைக் காட்சிகள் சிலவற்றை எமக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். சங்கப்பாடலிலே திளைத்தவர்கள் இயற்கை யின்பத்தைக் காணுமலிருக்க முடியாது. அவர்கள் தந்துள்ள சில காட்சிகளை இங்கு காண்க:

அக வாழ்வினை இனிதெடுத்துக் காட்டும் நூலாகிய அகநானூறெனுஞ் சங்கப்பாடலிலே கபிலர் குறிஞ்சி யொழுக்கத்தைப் பாடுகையில் தலைவியைக் காணுந் தலைவனது நாட்டின் இயற்கை வளத்தைக் கூறினர். மூங்கிலின் துணையிடத்தே காற்றினுலெழுமொலி குழலினிசை போன்றிசைக்கிறது. அருவியின் இனிய ஓசை முழவினிசையாக இசைக்கின்றது. மான்களின் தாழ்ந்த ஒலி பெருவங்கிய ஒலிபோன் றிசைக்கின்றது. பூக்களிலுள்ள வண்டுகளினெலி யாழிசையாக இசைக்கின்றது. மலையில் உலாவியாடும் மயில்கள் ஆடுவதற்கு மேடையிற் புகும் விறலியைப்போன்று தோற்றமளிக்கின்றன. இக் காட்சிகளை யெல்லாம் வியப்புடன் மந்திகள் கண்ணுறுகின்றன. அம் மலையின் இயற்கைக் காட்சியைக் காட்டிய புலவர் அந்நாட்டையுடைய தலைவனையும் எம் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார். அவன் புனத்தின் அருகே வில்லினைக் கையிற் பற்றியவாறே அம்பினைத் தெரிந்துகொண்டு போர் செய்கின்ற யானை எவ்வழிச் சென்றதென வினவுகின்றான். அவன் தோற்றத்தைக்கண்டு அவன் மேற் காதல்கொண்ட ஒரு தலைவி அவனைப் பெறுமையாற் கன்குலிலே படுக்கையில் நீர்வாருங் கண்ணையுடையவளாக வருந்தினளெனவும் தலைவி கூற்ருகவே அமைத்துக் காட்டினர்.

ஆடமைக் குயின்றஅவிர்துணை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்தியலியாடும்மயில்
நனவுப்புகு விறலியில் தோன்றும் நாடன்
உருவ வல்வில் பற்றிஅம்பு தெரிந்து
செருச்செய் யானை சென்னெறி வினுஅப்
புலர்குரல் ஏனற் புழையுடை ஒருசிறை
மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி அவருள்
ஆரிருட் கங்குல் அணையொடு பொருந்தி
ஓரியா ளுருவ தெவன்சொல்
நீர்வார்கண்ணெடுதெகிழ்தோளேனே.

இவ்வாறு நாட்டினியற்கை வளத்தையும், தலைவி நின்ற இடத்தினையும், தலைவனின் தோற்றத்தையும், அவனைக் கண்ட தலைவியின் நிலையையும் அப்படியே படம்பிடித்துள்ளார்.

தங்கால் முடக்கொற்றனரெனற புலவர் குறிஞ்சி யொழுக்கத்தைக் கூறிய செய்யுளைக் கவனிப்போம். தலைவி பூக்கொய்யச் சென்று பூச்சினை தாழ்ந்து கொடுத்தற்காக வேங்கையின் கீழ் நின்று புலி புலி யெனத் தோழியருடன் சேர்ந்து ஒலிசெய்கிருள். அவ்விடத்தில் அவ்வோசை கேட்டு ஒரு தோன்றல் வருகிறான். அவன் செங்கழுநீர் மாலையணிந்து தலையிலே வெட்சிப் பூவாலாகிய கண்ணி சூடி மார்பில் சந்தனம் பூசி வில்லினைக் கையிலேந்தி எய்வதற்கு அம்பினைத் தெரிந்துகொண்டு அந்தப் புலி சென்ற திசை யாதென வினவுகிறான். அவனைக் கண்டதும் தோழியும் தலைவியும் நாணத்தால் ஒருவருள் ஒருவர் மறைந்து நிற்கிறார்கள். அதுகண்ட தலைவன் புலி சென்ற வழி கூறிலர் எனவே உங்கள் வாயிலும் பொய்யுண்டோ என்று வினுவிக்கொண்டு தேரிலேறித் தலைவியைப் பல முறை பார்த்துவிட்டுத் தேரைச் செலுத்தி மீண்டு செல்கிருன். சென்ற தலைவனது தேர் மறையும் வரை தலைவி அவனையே நோக்கி நிற்கிருள். அவன் மறையுஞ் சமையம் வந்ததுந் தோழியை நோக்கி இவனெரு ஆடவனை என்கிருள். இக் காட்சியினைத் தோழி செவிலிக் கெடுத்துரைப்பதாகவே ஆசிரியரமைத்துள்ளார்.

மலிபூஞ் சாரலென் தோழி மாரோ
டொலிசினைவேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி யென்னும் பூசல் தோன்ற
ஒண்செங்கழுநீர்க் கண்போல்ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ்சேர்த்திய செச்சைக்கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே அவற்கண்டு
எம்முள் எம்முள் மெய்மறைபொடுங்கி
நாணி நின்றெனமாகப் பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மையீர் ஓதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன் எதிர் மறுத்து
நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றோன் மன்ற அக்குன்றுகிழவோனே
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்
தவன்மறை தேயம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்"

எனத் தலைவி நின்ற இடத்தையும் தலைவன் தோற்றத்தினையும் அங்குநடந்த செயல்களையும் செயல் நிகழ்ந்த மாலைக் காலத்தினையும் தலைவியதும் தலைவனதும் உள்ள நிகழ்ச்சிகளையும் எம்முன் கொணர்ந்து காட்டியுள்ளார்.

போந்தைப்பசலையாரென்ற புலவர் நெய்தலொழுக்கத்தைக் கூறியசெய்யுளில், தலைவி ஆயத்தாருடன் சென்று கடலாடுகின்ருள். கடற்கரைச் சோலையில் சிறு வீடு கட்டுகிருர்கள். அதிற் சிறு சோறு சமைத்து விளையாடுகிருர்கள். அதனுலெய்திய வருத்தம் நீங்குமாறு தோழியுடன் இளைப்பாறுகிருள். ஒரு தலைவன் அவ்விடத்தை யடைகிருன். அவர்களுடன் உரையாடத் தொடங்குகிருன். ஏ, மடவீரே! மாலைக்காலமாகி விட்டது. நான் தளர்ச்சியடைந்துள்ளேன். உம்மாலளிக்கப்படும் உணவை யான் உண்டு இச்சிறு குடிலில் இன்று தங்கவேண்டும். அவ்விதம் யான் தங்குவதால் உங்களுக்கேற்படும் குறை யாதுமுண்டோ? இவ்வாறு வினவுகிருன். தோழியுந் தலைவியும் அவனைக் கண்டு முகங்கவிழ்ந்து மறைவான் இடத்தை யடைந்து, மென்மையான குரலிலே தலைவனை நோக்கி யாமுண்பது மீனுணவு; இவை நுமக்குத் தக்கனவல்ல எனக் கூறுகிருர்கள். அதுகேட்ட தலைவன் யாம் நாவாய்களைக் காண்போமெனக் கூறிச் சிற்றிலையழிக்கிருன். தோழியை நோக்குகிருன். 'யாண் போய் வருகிறன்' எனக் கூறுகிருன். அது கேட்ட தோழி 'போய் வா' என்கிருள். அதைக்கேட்ட தலைவன் தேரின் கொடிஞ்சியினைப் பற்றிக்கொண்டு நிற்கின்ருன். அன்று கண்ட காட்சியினை இன்றுங் காண்கின்றேன் என்ருள் தோழி.

"........................ கானல்
தொடலை யாயமொடு கடலுடன் ஆடியுஞ்
சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தம் தீர யாஞ்சிறி
திருந்தன மாக எய்த வந்து
தடமென் பணைத்தோள் மடநல் லீரே
எல்லும் எல்லின் றசைவுமிக வுடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண்டி யானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனோ
எனமொழிந் தனனே ஒருவன் அவற்கண்
டிறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இவைநுமக் குரிய வல்ல இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம் இழுமென
நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணு மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு நன்னுதால்
ஒழிகோ யானென அழிதகக் கூறி
யான்பெயர்கென்ன நோக்கித் தான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றுமென் கட்கே"

இப்பாடலிலே தலைவியின் செயல்களையும் அவ்விடஞ்சென்ற தலைவனது செயலையும் தோழி தலைவனுகிய இருவரது உரையாடலையும் நாம் நேரிற் காணுகின்ருேமல்லவா?

—தொடரும்

# பேரின்பம்

— புதுவை முதுகண்ணன் —

✻

1. காற்றினை இழுத்து மூலக்
   காற்றினைச் சுழல விட்டு
   ஆற்றலால் உள்ளுக் குள்ளே
   அமைவுறும் கனலை வீக்கி
   ஏற்றியே முகஞ்சி வக்க
   இயற்றிடும் பயிற்சி யாலே
   ஏற்படல் உண்டோ சொல்மின்
   இணையிலா நற்பே ரின்பம்?

2. பொறியினை ஒடுக்கி யாக்கைப்
   பொலிவினைக் கெடுத்து வாழ்க்கை
   நெறியினில் இயற்கை இட்ட
   நேர்மையிற் பிறழ்ந்து வீணே
   குறிகொளுஞ் செயற்கைப் பண்பால்
   குறுகிடும் பயனும் யாதோ?
   அறிகிலேன் அதனு லுண்டோ
   அமைவுறும் நற்பே ரின்பம்?

3. இயேசுவைக் காண்போம் எந்தை
   எழிலமர் புத்தன் காண்போம்
   மயக்கறு இராம லிங்கன்
   மாண்பினைத் தெரிவோம் காந்தி
   வயங்கிடும் அண்ணல் காண்போம்
   இவரெலாம் வாழ்வில் யோகம்
   இயற்றியோ பெற்றார் என்றும்
   இயைந்திடும் நற்பே ரின்பம்?

4. புறமனக் கொடுமை வீழ்த்திப்
   பொறிசெலும் போக்கி லுண்டாம்
   மறவினைக் கடிந்து நாளும்
   மாண்பினை உற்றுத் தேறி
   அறநெறி நின்றார்; இன்ப
   அன்பினைப் பெருக்கி வாழ்ந்தார்;
   நெறிமுறை யோடும் தொண்டு
   நிகழ்த்தினர்; பேரின் புற்றார்!

5. நலிவுறும் மக்கள் வாழ்வில்
   நலத்தினை வேண்டி நாளும்
   மெலிவுசெய் கொடுமை வீழ்த்தி
   வேண்டிய நெறியைத் தோய்ந்து
   சலிப்பிலா உரத்தி னோடும்
   சார்ந்துயர் பணியை ஏற்றுக்
   கலங்கலைத் தெரிந்து போக்கிக்
   கண்டனர் நற்பே ரின்பம்!

6. வீடென ஒன்று முண்டோ
   விளக்குமின் தெரிய இன்றே!
   வீடெனல் வாழ்க்கைப் போக்கில்
   விரிந்திடும் துன்பங் கண்டு
   வீடுதல் அன்றோ காண்மின்!
   விறனுறும் பிறப்பின் மேன்மை
   நாடியே உயிர்கள் தொண்டு
   நயந்திடின் வரும்பே ரின்பம்!





# இலக்கிய மஞ்சரி

4-ம், 5-ம், 6-ம் புத்தகங்கள்

பாடசாலைகளில் இலக்கிய பாடமாக, நான்காம், ஐந்தாம், ஆரும் வகுப்புகளுக்கு உபயோகிக்கக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

விலை : 4-ம் புத்தகம் ... 50 சதம்
5-ம் ,, ... 60 ,,
6-ம் ,, ... 75 ,,

சுன்னுகம்: தனலக்குமி புத்தகசாலை



# இதய ஊற்று

கசின்

அத்தியாயம் 9.

## சப்பிரமஞ்சத்திற் சயனம்

நித்திரையாகக் கிடப்பவனை எழுப்பலாம். ஆனல் நித்திரை செய்வது போலப் பாசாங்கு செய்து கொண்டு கிடப்பவனை எழுப்ப முடியாது.

சாக்குக்கட்டிலுக்கும் சப்பிரமஞ்சத்திற்கும் எத்தனையோ விதத்தில் வித்தியாசமுண்டு. சப்பிரமஞ்சத்தில் நித்திரை செய்வது போலக் கிடப்பவர் அநேகமாக மரக்கட்டைபோல் உறங்கிவிடுவதுமுண்டு.

—சயன சங்கிரகம்

**புத்தூர் புவனேஸ்வரி** வித்தியாசாலை, யாழ்ப்பாணப் பகுதியில் பெயர்பெற்ற ஒரு பெண்கள் பாடசாலை. சங்கீதம், நடனம், தையல், வீட்டுப்பணி, குழந்தை வளர்ப்பு ஆதியாம் பாடங்களிற் பெயர்பெற்ற பட்டதாரிகள் அங்கே ஆசிரியர்களாகக் கடமையாற்றினர்கள். பெண்களைப் புதுமைப் பெண்களாக ஆக்கிக் கொடுக்கும் பணியில் புத்தூர் புவனேஸ்வரி வித்தியாசாலை பெரிதும் முயன்று வந்தது. இவ் வித்தியாசாலையின் தலைவியாக மிஸ் ஹூஸ் என்னும் வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி கடமையாற்றினுள். அங்கே சங்கீதம் பயிற்றும் பிரதான ஆசிரியையின் பெயர் மிஸ். திரிபுரசுந்தரி. திரிபுரசுந்தரி லலிதாவின் சிநேகிதி. திரிபுரசுந்தரியுடனேயே லலிதா வசித்து வந்தாள்.

லலிதாவும், திரிபுரசுந்தரியும் புத்தூர் புவனேஸ்வரி வித்தியாசாலையுடன் சேர்ந்தும், சோரமலுமிருந்த ஒரு வீட்டில் வசித்தனர். அவர்கள் வசிக்கும் வீட்டிலிருந்து புவனேஸ்வரி வித்தியாசாலைக்குப் போக உட்பக்கத்திற் படலை இருந்தது. அவர்கள் இருக்கும் வீட்டிற்கு இரண்டு அறையும் பின்னல் ஒரு சமையல் அறையும் இருந்தன. இரண்டு அறைகளையும் ஆளுக்கொரு அறையாக உபயோகித்து வந்தனர். இருவர் அறைக்கும் பொதுவாக முன்பக்கத்தில் ஒரு விறாந்தை உண்டு. அதைப் பொதுவாகப் புதியவர்களை வரவேற்க உபயோகித்து வந்தனர். திரிபுரசுந்தரி வசிக்கும் அறைக்குப் பின்பக்கத்தில் இருக்கும் சமையலறைக்குப் போவதற்காகப் பின்னுக்கும் ஒரு வாயில் இருந்தது. லலிதாவின் அறைக்கு முன்பக்கத்தில் மாத்திரம வாயில் இருந்தது. அவர்கள் இருவருக்கும என்று சொல்லிக் கட்டிய வீடுபோல அவர்களுக்கு வசதியாக அமைந்திருந்தது அவ்வீடு.

இரு ஆடவர்கள் வசிக்கும் வீட்டிற்கும், இரு பெண்மணிகள் வசிக்கும் வீட்டிற்கும் சில வகைகளில் வித்தியாசம் உண்டு. இவ்வித்தியாசம் அவரவர் குணத்திற்கு ஏற்றபடி இருப்பினும் பொதுவாகச் சொன்னல், ஆடவர் இருக்கும் அறை எப்பொழுதும் ஒரேமாதிரியாகவே யிருக்கும். பெண்கள் இருக்கும் அறை ஒருநாள் அளவுக்கு மிஞ்சிய அலங்காரமாகவும், ஒருநாள் அளவுக்கு மிஞ்சிய குப்பையாகவும் இருக்கும்.

லலிதாவும், மகாதேவனும், லலிதாவின் வீட்டை நோக்கிப் போகும்பொழுது, அங்கே இருந்த பெண்கள் பெரிதும் பரபரப் படைந்தனர். லலிதாவும் மகாதேவனும் வீட்டு வாயிலை அடையமுன்னர் குப்பையாயிருந்த அவ்வீட்டை ஒரு அளவு அலங்கரித்து விட்டனர். வட்டவடிவமான மேசைக்குச் சீலை விரித்தனர். கதிரைகளுக்குச் சீலை போட்டனர். அங்கங்கே சிதறிக் கிடந்த பொருட்களைப் பொறுக்கி வைத்தனர். இவ்வளவையும் செய்துவிட்டு உள்ளே ஓடிப்போய்த் தங்கள் ஆடை அணிகளையுஞ் சரிபார்த்துக்கொண்டனர். இப்படியான சந்தர்ப்பங்களிற் பெண்களுக்கு அசாத்தியச் சுறுசுறுப்பு ஏற்படும்.

பலநாட்களாக ஆண்களின் அடிச்சுவட்டைக் கண்டறியாத அவ்வீடு இன்று மகாதேவனின் வருகையால் புதுப் பொலிவுடன் விளங்கிற்று. பாலைவனத்திலே தோன்றும் சிறு தூறல்போல அவன் வருகை அச் சூழலுக்கு இருந்தது. வாட்ட சாட்டமும் முகத்தில் வழியும் அசடு எனக் கூறும் இளந்தன்மையும் பொருந்திய மகாதேவன், பெண்கள் மயமான அச் சூழலுக்கு ஒரு நல்ல காட்சியாக இருந்தது. தூண்டிலில் அகப்பட்ட மீனைக் கயிற்றிற் பிடித்து இழுக்கக் கயிற்ருேடு வருவது போல மகாதேவன் லலிதாவின் பின்னே சென்ருன்.

லலிதா வழக்கத்திற்கு மாருன உற்சாகத்துடன் வாயிற்படியில் ஏறியவுடன் பெயர் சொல்லிக் கூப்பிட்டாள். அவள் சொன்ன பெயர் மகாதேவனுக்கு விளங்கவில்லை. 'திறிபுறு' என்றமாதிரி அவனுக்குக் கேட்டது. இவர்கள் தங்களுக்குள் ஒரு பாஷை வைத்திருக்கிறுர்களோ என்று மகாதேவன் யோசித்தான். சில வாலிபர்கள் தாய் தந்தையரைப் பிரிந்து வலோற்காரமாகக் கிளப்பிக்கொண்டு செல்லும் பெண்களுக்கு உள்மனத்தில் ஒருசமயம் சிறு மகிழ்ச்சி இருந்தபொழுதிலும் நெஞ்சம் 'படக், படக்' என்று இடித்துக்கொள்ளும். அதுபோல மகாதேவனின் நெஞ்சமும் துடித்தது. 'திறிபுறு' என்று அவள் கூப்பிட்டது அவனுக்கு இன்னும் திகிலைக் கூட்டியது. எப்பவோ பார்த்த ஒரு படம் அவனுக்கு ஞாபகம் வந்தது. சில சந்நியாசிகள் வாலிபர்களைக் கிளப்பிக் கொண்டு போய்க் காளி தேவிக்குப் பலியிடுவதை அவன் ஏதோ ஒரு படத்திற் பார்த்திருந்தான். அதுபோலத் தன்னையும் பலியிடுவதற்காகத் தான் இவ்வளவு நாடகமும் நடிக்கப்பட்டதோ என்று அவன் சிந்தித்தான். அவள் கூப்பிட்டது அவனுக்கு மந்திர உச்சாடணம் போலத் தான் கேட்டது.

லலிதா கூப்பிட்டவுடன் உள்ளேயிருந்து 'களுக்' என ஒரு சிரிப்புக் கேட்டது. அச் சத்தம் கேட்டதும் அவன் மேலும் பயப்பட்டான். காட்டிலே திரிந்த மாட்டு நாம்பனை றேட்டிற் கொண்டுபோகும்பொழுது அது அங்கும் இங்கும் மிரள மிரள விழிப்பதுபோல் விழித்தான். லலிதா மறுபடி 'பாறு' என்று கூப்பிட்டாள். அந்தப் பாஷையும் அவனுக்குப் புரியவில்லை. அவனுக்கு அந்நேரம் தனது குரு விஸ்வநாதசாஸ்திரிகளின் ஞாபகந்தான் வந்தது. தான் பெரிதும் பிழையான வழியில் வெகுதூரம் வந்துவிட்டேன் என்பதை உணர்ந்தான்.

லலிதா 'பாறு' என்று கூப்பிட்டதும், அம்மா என்று சொல்லிக்கொண்டு ஒருத்தி வெளியே வந்தாள். அவள் உயரத்திற் கட்டையாக இருந்தாள். நிறம் மங்கலாக இருந்தது. அப்படியிருந்தபோதிலும் மிகவும் அழகு வாய்ந்தவளாகவும் திடகாத்திரம் உள்ளவளாகவும் இருந்தாள். அவளின் தேகம் வாடலின்றி ஒரே பூரிப்பாக இருந்தது. அவள் வெளியே வந்ததும், மகாதேவனைப் பார்த்தாள். அவள் கண் இமைகள் படபடவென்று ஆடின. அவனுக்கு 'இதென்னடா' என்ற மாதிரி இருந்தது. 'பாறு' என்றவள் தான் லலிதாவினதும் திரிபுரசுந்தரியினதும் சமையற்காரி. அவளின் பெயர் பார்வதி.

பார்வதி அம்பிகாபுரம்வாசி. லலிதா தான் அவளை அங்கு கொண்டு வந்தவள். அவள் அம்பிகாபுரம் கடைத் தெருவில் வசிக்கும் அப்பக்காரப் பொன்னம்மாவின் மகள். அவளுக்கு வயது பதினைந்து. பார்வதி அம்பிகாபுரம் ஆஸ்பத்திரியில் கங்காணியாகக் கடமை பார்க்கும் சங்கரன் என்னும் வாலிபனுடன் கள்ள நட்புப் பூண்டிருந்தாள் என்பது பொதுவான கதை. பெரிய பணக்காரர் விஷயத்தில் இது காதல் என்று பேசப்படும். இவள் விஷயத்திலோ இது கள்ள நட்பு என்று பேசப்பட்டது. சங்கரன் என்ற வாலிபன் குறைந்த சாதியினன். அப்பக்காரப் பொன்னம்மா ஏதும் விபரீதமாக நடந்துவிடுமோ என்று பயந்து லலிதாம்பிகையுடன் தனது மகளை விட்டாள். இச் சம்பவங்கள் ஒன்றும் லலிதாம்பிகைக்குத் தெரியாது.

பார்வதி வெளியே வந்து லலிதாம்பிகையின் சைக்கிளை வாங்கி உருட்டிக் கொண்டு போய் லலிதாம்பிகையின் அறைக்குள் வைத்தாள். 'இவருடைய சைக்கிளையும் கொண்டுபோய் வை' என்று லலிதாம்பிகை மகாதேவனின் சைக்கிளைச் சுட்டிச் சொன்னுள்.

லலிதாம்பிகையின் அறைக்குள் ஒரு சைக்கிள் தான் வைக்கலாம். இன்னெரு சைக்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## முன் கதைச் சுருக்கம்

✻

தாய் தந்தையர் அற்ற மகாதேவன் அம்பிகாபுரம் அனுதசாலையிற் சேர்ந்து கல்வி பயில்கிருன். அம்பிகாபுரம் அனுதசாலையில் அதிபராகவும், ஆசிரியராகவும் விசுவநாதசாஸ்திரிகள் கடமையாற்றுகிருர். விசுவநாதசாஸ்திரிகள் சீவியத்தில் ஏற்பட்ட ஏதோ ஒரு வெறுப்பினுற் பெண்ணினத்தின்மீது வெறுப்புள்ளவராக விளங்குகிருர். தனது கொள்கைகளைத் தனது மாணவர்களுக்கும் உபதேசிக்கிருர். மகாதேவன் விசுவநாத சாஸ்திரிகளின் உத்தம மாணுக்கனுக விளங்குகிருன்.

மகாதேவன் படிப்பு முடிந்து யாழ்ப்பாணக் கச்சேரியிற் கடமையாற்றுகிருன். அவன் வீட்டுக்கருகில் வசித்த லலிதா என்ற பெண்ணைப் பலமுறை சந்திக்கவேண்டி நேரிடுகிறது. லலிதாவின் உட்சட்டையை, என்ன பொருள் என்று தெரியாமல் ஒருநாள் கையால் எடுக்கின்ருன். பின் லலிதா தனது என்று சொன்னவுடன் அதைக் கொடுக்கிருன். பெண்ணின் உடுப்பைக் கையாலே தீண்டிவிட்டதற்கு அருவருத்துச் 'சோப்' போட்டுக் கையைக் கழுவுகிருன்.

லலிதா, மகாதேவனின் கௌபீனத்தை, என்ன பொருள் என்று தெரியாமல் எடுத்துக் கொடுத்து 'அது என்ன பொருள்' என்று கேட்கிருள். அவன் 'கௌபீனம்' என்று சொல்லவும், லலிதாவுக்கு அது விளங்கவில்லை.

லலிதா, கேணல் சுந்தரத்தின் செல்ல மருமகள். தாய் தந்தையற்ற லலிதா தனது மாமனுருடன் வசித்துவந்தாள். கேணல் சுந்தரம் மிலிற்றறியில் வேலைசெய்தார். பொறுப்பற்றவர்; குடிப்பழக்கமுள்ளவர்

லலிதா ஒருநாள் தனது காரில் மகாதேவனை ஏற்றிக்கொண்டுபோய் அம்பிகாபுரத்தில் விட்டாள். இதைக் கேள்விப்பட்ட விசுவநாதசாஸ்திரிகள் மகாதேவனை வேறு வீட்டுக்கு மாற்றுவிக்கிருர்.

மகாதேவன் பொது உடைமை இயக்கத்தில் சேர்ந்திருக்கிருன் என்று சந்தேகப்பட்ட அரசாங்கம் அவனைக் கிராமப் பக்கத்திற்கு மாற்றுகிறது.

கேணல் சுந்தரமும் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிருர். லலிதா, தனது சிநேகிதியின் தூண்டுதலால், வயாவிளான் கிராமப் பாடசாலையில் ஆசிரியையாகச் சேர்ந்துகொண்டு, புத்தூரில் வசித்த திரிபுரசுந்தரியிடம் சைக்கிளில் வந்துபோகிருள். நிலாவரைக்கருகில் மீண்டும், லலிதாவும், மகாதேவனும் சந்திக்கின்றனர்.

நவக்கிரிப் பொன்னர் தமது மனைவியிடம் மதுவருந்தப் பணங் கேட்டுக் கொடாத சந்தர்ப்பங்களில் நிலாவரைக்குள் விழப்போகிறேன் என்று பயமுறுத்திப் பணம் பறிக்கின்ருர். இரண்டொரு சமயம், நிலாவரைக்குள் குதிக்கவந்த பொன்னரை மகாதேவனும், லலிதாவும் சமாதானப்படுத்தி விடுகின்றனர். பொன்னர், ஒருநாள், மகாதேவன் பிடிக்குமுன்னரே நிலாவரைக்குள் விழுந்துவிடுகிருர். என்னவோ! என்று பயந்த சந்தர்ப்பத்தில் பொன்னர், நீந்திக் கரையேறுகிருர். அதன்பின் அவர் அங்கே செல்வதில்லை.

ஒருநாள், லலிதா, மகாதேவன் தன்னைக் காதலிக்கவில்லையென்று கூறவே, நிலாவரைக்குள் குதிக்கிருள். மகாதேவனும் உடனே குதிக்கிருன். மகாதேவனுக்கு நீந்தத்தெரியாது. லலிதாவுக்கு நீந்தத் தெரியும். லலிதா நீந்தி மகாதேவனையும் கரையேற்றுகிருள். லலிதா நனைந்த உடுப்புகளுடன் நிர்வாணப் பெண்போலக் காணப்படுகிருள். மகாதேவன் அத் தோற்றத்தைப் பார்க்க விழைகிருன்.

மகாதேவனை ஈர உடுப்புகளுடன் விசுவநாதசாஸ்திரிகளிடம் போகவேண்டாமென்று, லலிதா, அவனைத் தனது வீடுதிக்கு அழைக்கிருள். மகாதேவனும் அரை மனதுடன், லலிதாவுடன் கூடச் செல்கிருன்...............................


அன்புக்கு அறிகுறி

அன்பர்களுடன் தொடர்பு வைத்திருப்பதற்கு சிறந்த வழி

ஈழகேசரி

★

ஒரு வருடச் சந்தாப்பணத்தையும் இவ்விண்ணப்பபத்திரத்தையும் நிரப்பி அனுப்பிவிட்டால் ஈழகேசரி பிரதிவாரமும் உங்கள் உற்ருர், உறவினர் அன்பர்களைச் சேர்ந்தடையும்.

சந்தா அதிபர்
ஈழகேசரி
சுன்னுகம்

ஐயா,

பின்வரும் பெயருக்குத் தங்கள் ஈழகேசரியை அனுப்பிவைக்கவும். இத்துடன் ஒரு வருடச் சந்தா ரூ.6/- வெள்ளி 6/- முற்பணமாக அனுப்பியுள்ளேன்.

..................................

ஒப்பம்

பெயரும் விலாசமும்:

..................................

..................................

..................................

..................................

கொழும்பில்

ஈழகேசரி

✻

கிடைக்குமிடம்:

பேசிக் புக்ஸ்ரோல்,
99 சதாம் வீதி,
கோட்டை :: கொழும்பு

# தமிழ்த் திருவிழா ஏற்பாடு

## ஈழநாட்டுக்கு அரிய சந்தர்ப்பம்

## உலக சகோதரத்துவமும் எதிர்கால மதமும்

22-2-51

யாழ்ப்பாணத்தில் அடுத்த ஏப்ரில் மாதம் நடைபெறவிருக்கும் தமிழ்விழாவுக்கு ஆதரவு பெறும் நோக்கமாக இலங்கையின் பிரதான மாகாணங்களிற் பூர்வாங்கக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்குக் கொழும்பு சகிராக் கல்லூரியில் ஸேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெறும். இதிற் கலந்து கொள்வதற்குக் கொழும்பிலுள்ள பல பிரமுகர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகின்றேன்.

தமிழ்விழாத் தலைவரான ஸ்ரீ எஸ். நடேசபிள்ளை அவர்கள் இக்கூட்டத்திற் பங்கு பற்றிப் பேசுவார். புதன் கிழமையன்று இங்கிருந்து வெளியான ஸிலோன் ஒப்சேவர் பத்திரிகை தமிழ்விழா சம்பந்தமான விபரங்களை முதற் பக்கத்தில் முக்கியமாகப் பிரசுரித்திருக்கின்றது.

தமிழ் விழா சம்பந்தமாக ஒரு துண்டுப்பிரசுரமும்வெளியாகியிருக்கின்றது. அதில் ஒருபகுதி வருமாறு:

"ஈழநாட்டிற்கும் தென்னிந்தியாவுக்கும் நெடுங்காலமாக இருக்கும் தொடர்பை இவ்விழா இக்காலத்தில் உறுதிப்படுத்தி இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தோடு இன்றும் என்றும் இணைக்கப்பட்டவர்கள் என்பதை விளக்குவதற்குரிய ஓர் அரிய சந்தர்ப்பமாகும். தென்னிந்தியாவிலுள்ள தமிழ் மக்கள் இலங்கைத் தமிழ்மக்களிடம் கொண்டுள்ள பெரும் மதிப்பைக்காட்டும் பொருட்டே, தமிழ் வளர்ச்சிக் கழகம் இவ் விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு உடன்பட்டிருக்கிறது. இந்தியாவில் பல துறைகளில் புகழ்படைத்த தமிழறிஞர்கள் இவ்விழாவை முன்னிட்டு இங்கு வருவதற்கு இசைந்துள்ளார்கள். தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் நானூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இவ் விழாவுக்கு வருவார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது. அவர்களை ஏற்றுச் சிறந்தவகையில் உபசரிப்பதற்குரிய ஒழுங்குகள் செவ்வனே செய்யப்படவேண்டும். மேலும், தமிழ்க்கலைக் காட்சியும், இசை, நாடக அரங்கும் இவ் விழாவின் அங்கங்களாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்வது அவசியமாகும். இவற்றிற்கெல்லாம் ஏறக்குறைய ரூபா 20,000 வேண்டும் என்று மதிப்பிடப்படுகின்றது. இவ்விழாவின் பெருமைக்கேற்ப, இதனை இங்கு கொண்டாடுவதற்கு ஆவன செய்து உதவிபுரிதல் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள தமிழ் மக்களின் கடனாகும் என்பதை உணர்ந்து, அன்பர்கள் தங்களாலியன்ற பொருளுதவியும் ஏனைய உதவிகளையும் செய்யுமாறு வேண்டுகின்றோம்."

### திரு. ஜினராஜதாசா

பிரமஞான சங்கத் தலைவர் திரு. ஜீ. ஜினராஜதாசா அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குப்போகும் வழியில் கொழும்புக்கும் விஜயஞ் செய்துள்ளார். இலங்கையிலே பலவகைப்பட்ட மதங்களைச் சேர்ந்த சமூகத்தவர்கள் இருக்கும் பொழுது ஒரு அரசாங்க மதத்தை நிறுவுவது அசாத்தியமானதாகும். அப்படிப் புகுத்தினாலும் அது நிலை நிற்காது என்று கூறிப்பிட்டுள்ளார். சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை இலங்கைப் பல்கலைக்கழகம் கிங் ஜோர்ஜ் மண்டபத்தில் மன்பதையின் எதிர்கால மதம் என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். உண்மையான சகோதரத்துவ மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டுதான் மக்களின் எதிர்கால மதம் அமையவேண்டுமெனக் குறிப்பிட்டார். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து நிற்கும் சகோதரத்துவம்தான் சிறந்த மதமாக இருக்கும் என்பதை விளக்கிக் காட்டினார். இவர் நிகழ்த்தவிருந்த வானொலிப் பேச்சு வானொலி நிகழ்ச்சி யதிகாரியால் நீக்கப்பட்டது.




### களவாக வருதல்

இந்தியாவிலிருந்து ஆட்களும் சாமான்களும் களவாக இலங்கைக்கு வந்து சேர்வதைப்போல இங்கிருந்தும் சில சாமான்கள் இந்தியாவுக்குத் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்படுகின்றனவாம். இதைத்தடுப்பதற்குஇலங்கை-தென்னிந்திய பொலிஸ் சங்க அதிகாரிகள் மகாநாடு ஒன்று சென்னையில் இவ்வாரம் ஆரம்பமாகிறது. இலங்கை பொலிஸ்பகுதியினர் இதிற்கலந்து கொள்ளச் சென்னைசென்றிருக்கின்றனர்.

### தேசீயக் கொடி

இலங்கையின் தேசியக் கொடியைப்பற்றிக் கொடி நிர்வாகசபை செய்த சிபார்சு அடுத்த பிரதிநிதிகள்சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படுமெனக் கூறப்படுகிறது. சுதந்திரம் பெற்று மூன்று வருடங்கள் சென்றும சுதந்திரக் கொடி இன்னும் தீர்மானிக்கப் படவில்லை. தேசிய கீதமும் இதுதான் என்பது திட்டமாகத் தீர்மானிக்கப்படவில்லை. தேசிய மொழிகளைப் போல இவ் விஷயங்களும் மெல்ல மெல்ல ஊர்ந்து செல்கின்றன. தேசியக்கொடிபற்றிய தீர்மானத்தைப் பிரதமர் அவர்களே பிரேரிப்பார்.

### செய்தி ஸ்தாபனம்

மேற்சபைக் கூட்டத்தில் டொக்டர் நாகநாதன் அவர்கள் "இலங்கை சுதந்திர நாடாதலின் அதற்கெனச் சுயேச்சையான ஒரு அயல்நாட்டுச் செய்தி ஸ்தாபனம் அமைக்கப்படவேண்டும்" என்ற ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பித்தார்கள். இத்தகைய ஒரு ஸ்தாபனம் இலங்கைக்கென இல்லாதிருத்தல் மிகவும் ஒரு குறையென்றுதான் சொல்லவேண்டும். டொக்டர் நாகநாதன் தமது தீர்மானத்தை நன்கு விளக்கிக் காட்டினார்.

### கொழும்புத் திட்டம்

கொழும்பில் ஒரு வாரம் வரை நடைபெற்ற தெற்கு, தென்கிழக்கு ஆசியா பொருளாதார ஆலோசனைச்சபையின் மகாநாடு முடிவுபெற்று விட்டது. எதிர்காலத்தில் செய்து முடிக்கவேண்டிய பல விஷயங்களைப்பற்றி இம் மகாநாடு ஆலோசித்தது. தொழில் நுட்ப உதவியளிப்பதில் இதுவரை ஏற்பட்ட முன்னேற்றத்தையும் இது பரிசீலனை செய்தது. இந்த நிர்வாகசபைக் கூட்டங்களில் நடைபெற்ற விஷயங்களைப் பத்திரிகை நிருபருக்கு அறிவிப்பதில் திருப்திகரமான முறைகள் கையாளப்படவில்லையெனவும், போதிய விளம்பரம் செய்யப்படவில்லையெனவும் சில பத்திரிகை நிருபர்கள் புகார் கூறினர்.

### இலவசக் கல்வி

இலவசக் கல்வித் திட்டத்திற் பாடசாலைகள் சேர்ந்து கொள்வதையிட்டுத் தம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டிய கடைசித் திகதி பெப்ருவரி 28-ந் திகதியாகும். கொழும்பிலுள்ள சில பிரபல கல்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

---

பைம்பல் உலகம்

★ தமிழ்த் திருவிழா யாழ்ப்பாணத்தில் ஏக அமர்க்களமாக இருக்கப் போகின்றதேயென்று மகிழ்ந்து கொண்டிருக்கையில் முகத்தார் வந்தார்.

# சீமைப் பகட்டு

"கதிராமருடைய பொடியனுக்குத் திசையடித்து விட்டது. சீமைக்குப் படிக்கப் போறானும். பேப்பரிலை நீர் பாக்கவில்லையோ?" என்று கேட்டுக்கொண்டே முகத்தார் சாக்குக் கட்டிலில் வந்து சௌகரியமாகக் குந்தினர்.

நான் அப்போதுதான் யாழ்ப்பாணத்தில் இவ்வாண்டு நடைபெறவிருக்குந் தமிழ்த் திருவிழாவைப்பற்றிப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தியைப் படித்துக்கொண்டிருந்தேன்.

தமிழ் விழா பரமேஸ்வரக் கல்லூரியில் விசேஷமாக அமைக்கப்பெறும் பந்தலில் நடைபெறுமெனவும், பந்தல் அதிக பணச் செலவில் அழகாக அமைக்கப்படும் எனவும் அதிற் கண்டிருந்தது. இசையரசு தண்டபாணி தேசிகர் போன்ற மகா வித்துவான்கள் இசை மாரி பொழிவார்கள் எனவும் அப் பத்திரிகை கூறியது. இதை அறிந்தவுடன் சர்க்கரைப் பந்தரிலே தேன்மாரி பொழிவதுபோலிருந்தது! இசையரசு போன்றவர்கள் வாரி வழங்கும் இசை வெள்ளத்திலே பந்தல் மிதந்தாலும் மிதக்கும் என்று எண்ணியபோது,வேறொருவிஷயம் எனக்குப் பயத்தை உண்டாக்கிற்று. அந்த இசைமாரி பொழியும்போது, பந்தர் ஒழுகினால் அங்கு எழுந்தருளியிருக்கும் பக்த கோடிகளின் கதி யாதாகுமோ என்று நினைத்தேன். மறுகணம் மூக்கிற் கையைவைத்து யோசித்தபோது இசை வெள்ளமானது அங்குள்ள மேடையிலிருந்தே அக்கம் பக்கமெல்லாம் பெருக்கெடுத்துப் பாயுமாகையால், பந்தல் ஒழுகுவதற்குக்

சோணாசலம்

காரணமில்லையென உணர்ந்தேன். இசைவெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தாலும் சங்கீத இரசிகர்களும், இசைவாணர்களும் அதை இருகாங்களாலும் வாரி அள்ளிப் பருகிவிடுவார்கள். எனவே, வெள்ளம் வந்தாலும் பந்தலுக்கு ஆபத்தில்லை யென்று நினைத்துத திடப்படுத்திக்கொண்டேன்.

தமிழ்த்திருவிழா யாழ்ப்பாணத்தில் ஏக அமர்க்களமாக இருக்கப்போகின்றதேயென்று மகிழ்ந்துகொண்டு பொடிப் பட்டைக்குள் விரல்களை விட்டுத் துளாவியபோதுதான், முகத்தார் வந்து சாக்குக்கட்டிலிற் குந்தினர்.

"எப்படி முகத்தார்? நேற்று இந்தப்பக்கம்காணவில்லையே?" என்றேன்.

"இப்ப சரியான பனிகாணும். பின்னேரம் அஞ்சுமணிக்கே குளிரத் தொடங்கிவிடுகுது. இரவிலே மழைபோலப் பனி பெய்யுது. வீட்டிலே குழந்தைகுஞ்சுக்கெல்லாம்சமியாக்குணமுஞ் சத்தியுந்தான். இங்கிலிசு வைத்தியம் இந்த நாளையிலே தர்ச்செய்யுதில்லை. அண்ணாமலையரிட்டைத் தான் வைத்தியம் என்று அழுவாரைப்போலப் பேசலானார்.

முகத்தாரின் பிரலாபத்தை நிறுத்துவோம் என்று நினைத்துக் "கதிர்காமருடைய மகனைப்பற்றி என்னவோ சொல்லிக்கொண்டு வந்தீரே" என்றேன்.

"அது உமக்குத் தெரியாதோ? பொடியன் கவண்மேந்துக் காசிலே சீமைக்குப் படிக்கப்போறானும்."

"சீமைக்குப் படிக்கப்போவது பெரிய மதிப்பென்று இங்குள்ளவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அங்கு சென்று படிக்கும் எங்கள் பிள்ளைகள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது தத்தளிக்கும் விஷயம் இங்குள்ளவர்களுக்குத் தெரிவதில்லை. பெரிய இடத்துப் பேர்வழிகள் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சிலரின் பிள்ளைகள், லண்டனிற் கோப்பை பீங்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

விலை அறிவிப்பு

ஊட்வார்ட்ஸ் 'கிறைப் வாட்டர்'

ஊட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரின் உண்மையான சில்லறை விற்பனவு விலை

ரூபா 2 ஒரு போத்தல்

[எங்கு உள்ளூர் வரி செல்லுபடியோ அது உள்பட]

கூடுதலாகக் கொடுக்கவேண்டாம்

ஊட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரை நீர் வாங்கும்போது



ஒவ்வொருபோத்தலிலும் இவ்வடையாளத்தைப் பார்த்து வாங்கவும்

போலிகளில் எச்சரிக்கையாயிருங்கள்!

WW I-III W. WOODWARD, LTD., LONDON, ENGLAND.




# ஈழகேசரி

சுன்னாகம், விகிர்தி மாசி ௧௩

— காந்தி ஆண்டு 82 —

பேசக் தந்தி இல. 805


## இது என்ன அக்கிரமம்?

இருந்தாற் போலிருந்து பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரித்துவிட்டது. இவ் விலையேற்றம் எவ்வளவுக்குச் செல்லும் என்று கூறவியலாது. பொருள்கள் கிடையாமையாலும், இறக்குமதியின்மையாலுந் தான் விலை ஏறிவிட்டது என்று முற்றுகக் கூறிவிட முடியாது. சுய நயத்தை மாத்திரம் இலக்காகக்கொண்ட வன்னெஞ்சு படைத்த வியாபாரிகள் செய்யும் அக்கிரமத்துக்கு எல்லையில்லை. பொதுமக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை அவசியமின்றி மறைவிடங்களுக்கு அனுப்பி விடுகின்றனர். பின்னர் சிறிது சிறிதாக அருமைப்படுத்திக் கள்ளச் சந்தைமூலம் தாம் நினைத்த உயர்ந்த விலைக்கு விற்க ஆரம்பித்து விடுகின்றனர். இக்கத் திருவிளையாடலே யுத்த காலத்தில் இவ் வியாபாரிகளால் மிக இலாபத்துடன் கையாளப்பட்டது. இப்போது மறுபடியும் இந்த வியாபாரிகள் தமது நாடகத்தை ஆரம்பித்துள்ளனர்.

சாதாரண பொருள்களின் விலையைக் கூட்டிவிடுவது ஒரு புறமாக, உணவுப் பொருள்களையும் அவ்வாறே செய்துவிடுகின்றனர். ஏழை மக்கள் இக் கொடுஞ் செயலின் காரணமாக அடையுந் துயரும் கஷ்டமும் இம்மாத்திரமன்று. பொருள்களை மறைத்துக் குவித்து வைப்பதாலேதான இவ் விலையேற்றம் மிக வேகமாகச் செல்கின்றது. அரசினர் இந்தக் கொடுமை நிகழாது தடுக்க வேண்டிய ஒழுங்குகள் செய்யவேண்டும். தேவையெனக் கண்டாற் புதிய சட்டங்களை இயற்றியாவது வியாபாரிமாரின் குறும்புத்தனத்தை அடக்கவேண்டும். காலத்தில் அரசினர் நடபடிக்கைகளை கையாளாவிடின் பொதுமக்கள் மிக்க தீமைக்கும் நட்டத்துக்கும் ஆளாகவேண்டியதாகும். உணவுப் பகுதி மந்திரியார் இவ்விஷயத்தில் இன்னும் அக்கறைகாட்டாதிருப்பது மிக்க ஆச்சரியமாகின்றது. வியாபாரிகள் அநியாயமுறைகளைக் கையாண்டு கொடுமைகள் செய்ய அரசினர் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பதா?

இந்தியாவில் இப்படியாக வியாபாரிகள் அக்கிரமஞ் செய்யத் தலைப்பட்டவுடன், அரசினர் காலத்திலேயே நடபடிக்கைகளைக் கையாண்டு பாதுகாப்புக்களைத் தேடிவிட்டனர். இவ்வாறே இலங்கையரசினரும் ஏன் செய்யக்கூடாது? உணவுப் பொருள்களையும் மற்றைய தேவைக்குரிய பொருள்களையும் பதுக்கி வைப்போர்க்குக் கடுந் தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். அபராதம் விதிக்கும் முறையை நிற்பாட்டிச் சிறைத்தண்டனை வழங்கிவரின் இவ்விஷயத்தில் பெரு நன்மைகள் ஏற்பட இடமுண்டு. எவ்வளவு அபராதம் விதித்தாலும் இக்கொடிய வியாபாரிகள் தமது அக்கிரமச் செயலைக் கைவிடப் போவதில்லை. விதித்த அபராதத்தைக் கொடுத்துவிட்டுத் தாமும் பெரிய மனிதராக நடித்து விடுகின்றனர். சிறைத்தண்டனைதான் இவர்களை நல்வழிப்படுத்தக் கூடியது. சமீபத்தில் நூற்றுக் கணக்கான பெரிய வியாபாரிகள் இக்குற்றத்துக்காக இந்தியாவிற் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. எனவே நமது அரசினரும் விழித்தெழுந்து நடபடிக்கைகளைக் கையாண்டாற்றான் பொது மக்களுக்கு ஆறுதல் ஏற்படும்.

அத்துடன் இவ்விஷயமாகப் புதிய சட்டங்கள் இயற்ற முன்னர், அரசினரின் கட்டுப்பாடுகளை நிலைபெறச் செய்யும் உத்தியோகத்தர் சன்மார்க்கமும், நீதியும், நடுவு நிலைமையும் வாய்ந்தவர்களாய் நியமிக்கப்படுவது மிக அவசியம். கைலஞ்சம் பெறுவோர், பட்சபாதமாக நடப்போர், நீதியை நிலை நாட்டாது விடுவோர் இந்த அரிய தொண்டினைச் செய்தற்கு உரியரன்று. இவ்வுத்தியோகத்தர்களை நியமிக்கும் விஷயத்தில் அரசினர் மிக்க சாக்கிரதையாக இருக்கவேண்டும். பொது மக்களை உறிஞ்சித் தனவந்தராக முயலும் வியாபாரிகட்கு இரக்கங் காட்ட வேண்டியதேயில்லை. இத்துறையில் அரசினரின் ஊக்கம் மாத்திரம் நன்மையைத் தரமாட்டாது. உத்தியோகத்தர்களும் பொது மக்களும் உயரிய நோக்குடன் அரசினருடன் சேர்ந்து உழைக்கவேண்டும். நியாயம் தவறி நடப்போர்களைப் பொதுமக்கள் காட்டிக் கொடுக்க வேண்டும். இத் துறையிற் கடமையாற்றும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரும் நடுவுநிலை தவறாது தேச நலத்தை நாடியுழைப்பின் ஒருவித தீமையும் ஏற்படக் காரணமில்லை.

### திருகோணமலையில் யுத்தப் பயிற்சி

திருகோணமலைக் கருகேயுள்ள கடலிற் கூட்டுக் கடற் படையினர் யுத்தப் பயிற்சி நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

### வறிய பிள்ளைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதி தஹநாயகா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

யார் எதைத்தான் பேசினாலும் அரசாங்கக் கட்சியினர் தாம் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்பதை நிலைநாட்டுவதில் மகா கெட்டிக்காரர். எனவே புதிய கல்வியறிக்கை சட்டமாகிக் கொண்டது.

### தேசீயக் கொடி

பிரதிநிதிகள் சபை அடுத்தமாதம் முதலாந்திகதி கூடும்போது தேசீயக்கொடிச் சபையினரின் சிபார்சுகளை சபை அங்கீகரிக்கவேண்டுமென்ற தீர்மானத்தைப் பிரதமர் சமர்ப்பிப்பார். இதை முடிவு செய்யும்விஷயத்தில் அரசாங்கக்கட்சியினர்சுயேச்சையாக வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என அறிகின்றேன்.

தேசீயக்கொடிச் சிக்கல் தீர்ந்தபின்னரே தேசீய கீதம் பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து முடிவுகாணும் என அறியக்கிடக்கின்றது.

## பாதை ஓரத்தில்

பாட்டைசாரி

நாட்டு மக்கள் ஏற்க மறுத்துள்ள சிங்கக் கொடியை, "இதுதான் தேசியக் கொடி" என்று சொல்லிப் பிரதிநிதிகள் சபையின் ஆதரவை நாடி நிற்கின்றார் பிரதமர் சேனநாயகா.

சுதந்திரம் பெற்ற எந்த நாட்டிலாவது இந்த மாதிரியான அவமானம் நடந்ததில்லை. சுய மரியாதையற்ற பிரதிநிதிகள் ஒரு சிலர் நாட்டு மக்களுக்குத் தொண்டு புரிய வெளிக்கிளம்பியிருக்கும்போது, சிங்கக் கொடியல்லச் செங்கற் கொடி பறந்தாலும் அவர்கள் அதை யிட்டுக் கவலை கொள்ளப் போவதில்லை.

❖

### சதி வேலையா?

சென்றவாரம் கொழும்பு மாநகரிலே கொழும்புத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்குச் சாம்ராச்சிய நாடுகளிலுள்ள பிரதிநிதிகள் ஒரு சிலர் கூடினர். இவர்கள் தங்கள் பேச்சுவார்த்தைகளைப் பரம இரகசியமாக நடாத்தினர் என லண்டனிலுள்ள பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் சில கண்டித்துள்ளன. இலங்கையிலுள்ள பத்திரிகைகளும் இக் குசுகுசு கூட்டத்தைப்பற்றித் தங்கள் ஆத்திரத்தை வெளிக்காட்டப் பின்னிற்கவில்லை. கொழும்புத்திட்டமென்றால் அது என்ன? கொழும்புக்குத் தலைப்பட்டணம் இலங்கையா? இலங்கை கொழும்பில் உள்ள பட்டணமா? இவ்வாறு பக்கத்தில் உள்ள எங்கள் இந்தியச் சகோதரர்களே விபரம் அறியாது தடுமாறும்போது, ஏதோ தென்கிழக்கு ஆசிய மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் செம்மையாக்கத் திட்டம் வகுத்துள்ள சாம்ராச்சியப் பெரும்புள்ளிகள் கடல் கடந்து வந்து இங்கு இரகசிய மகாநாடு கூடிய நோக்கம் மிகுந்த ஆச்சரியத்தையே உண்டுபண்ணியிருக்கின்றது. இவர்களின் திருத்தொண்டைச் சதிவேலை யெனப் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத்திற் கூறியிருந்தார்.

இந்த அழகில், கொழும்புத் திட்டம் பற்றிய மகாநாட்டுக்கு இருட்டடிப்பு வேலை நடாத்திய திருவாளர்களின் புத்திக் கூர்மையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை!

❖

### வெற்றிலையால் ஆபத்து

வெற்றிலை பாக்குத் தின்பதாற் புற்று நோய்க்கு இடங்கொடுப்பதுடன், உயிருக்கும் ஆபத்தாகி விடுகின்றது. சென்றவாரம் கொழும்பிலுள்ள ஓடும் 'ட்ராம்'வண்டியிற் சென்றஒருவர்வெற்றிலையை மென்றவண்ணம் துப்புவதற்காகத் தலையை வெளியில் நீட்டினார். எதிர்ப் பக்கத்திலிருந்து வந்த வேறோர் 'ட்ராம்' வண்டியுடன் அவருடைய தலை மோதுண்ட காரணத்தால் அவர் மாண்டுபோனார். ஆறிலுஞ் சா, நூறிலுஞ் சா என்று சொல்லி வெற்றிலை அபிமானிகள் சமாதானஞ் சொல்லித் திருப்தியடைய வேண்டியதுதான்.

❖

### திருவிழா ஆரம்பம்

இலங்கையில் உள்ள அரசியற் கட்சிகள் மீண்டுந் தங்கள் வேலைகளை ஆரம்பித்துவிட்டன. 1953-ம் ஆண்டில் நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலுக்கு இப்போதே அடிகோலத் தொடங்குகின்றன. சென்றதேர்தலில் ஐக்கிய தேசீயக்கட்சி 42 தொகுதிகளில் வெற்றி கண்டது. தொகுதிகளின் முழுத்தொகை 101. ஐக்கிய தேசீயக் கட்சியினர் இம்முறை தென்மாகாணத்தில் உள்ள இடதுசாரிகளின் தொகுதிகளில் நாட்டஞ் செலுத்தி வருகின்றனர். ஒரு தஹநாயகாவைப்போல் அங்கு இப்போதெல்லாம் பல தஹநாயகாக்கள் முளைத்திருப்பதாகக் கேள்வி!

❖

### கட்சிக்கு வீடில்லை

கொம்யூனிஸம் பேசும் ஒருவிதமான இடதுசாரிக் கட்சிக்குக் கொழும்பிலே காரியாலயம் அமைப்பதற்குக் கட்டடம் எதுவுங் காலியாகவில்லையாம். இப்பொழுது இருக்கும் இடத்தை விட்டுக் கிளம்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதால், இந்த அரசியற் கட்சி இருக்கஇடமில்லாமல் தவிக்கின்றதெதென அறிகின்றேன்.

### குண சித்திர ஆராய்ச்சி!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக ஈழகேசரி ஆசிரியருக்குக் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். தமிழ் விழா மலர் ஆசிரியர் குழுவிற் பின்வருவோர் பணியாற்றுகின்றனர். திரு. எஸ். நடேசபிள்ளை, முதலியார்சின்னத்தம்பி, திரு. இராஜ அரியரத்தினம், திரு. க. கவரதநினம், திரு. ச. அம்பிகைபாகன்.

### ஆயுர்வேத வைத்தியம்

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பெற்றுள்ள ஆயுர்வேத கண் வைத்தியசாலை சமீபத்தில் உள்நாட்டு வைத்திய சங்கத் தலைவர் திரு. குணவர்த்தன அவர்களாலே திறந்து வைக்கப்பட்டது. இதுபோன்ற வைத்தியசாலை இலங்கையில் வேறு எப்பகுதியிலும் இல்லை. இங்கு 50 நோயாளர் சிகிச்சை பெறுவதற்கான படுக்கை போன்ற பல வசதிகள் உள.

### தமிழ்த்திருவிழா ஏற்பாடு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லூரிகள் இத் திட்டத்திற் சேரமாட்டாவென அறியக் கிடக்கின்றது. சில இன்னும் ஒரு தீர்மானமும் செய்யவில்லையாம்.

### திருவள்ளுவர் திருநாள்

இத்திருநாள் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை (25-2-51) மாலை 5 மணி முதல் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெறும்.

### கிரிக்கட்

பஸ்ஸில் ஏறினாலுஞ் சரி, றெயிலில் பிரயாணஞ்செய்தாலுஞ் சரி எங்கே பார்த்தாலும் கிரிக்கட் பேச்சாகவே இருக்கிறது. கொமன்வெல்த் கிரிக்கட் கோஷ்டியினர் இலங்கைக்கு விஜயம் செய்து சில 'மாச்சு'கள் ஆடுகின்றனர். இவர்களுடைய ஆட்டத்தைப் பார்ப்பதற்கு ஆயிரக் கணக்காகச் சனங்கள் சென்றனர். மத்தியானச் சாப்பாட்டையும் தயாரித்துக்கொண்டு போயிருந்து ஆட்டம் பார்ப்பதென்றால் ஆட்டத்தில் உள்ள கரிசனை எவ்வளவு என்பதை ஊகித்துக்கொள்ளுங்கள்.

### சீமைப் பகட்டு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கான் கழுவி வயிற்றுப்பாட்டைக் கவனிக்கின்றார்கள். வேறு சிலர் பெரிய விடுதிகளிற் சாயங்கால வேளைகளிற் சேவகர்களாகவும் விடுதியில் வதிபவர்களுக்குத் தொட்டாட்டு வேலைகள் செய்கின்றனர். இதற்கெல்லாங் கை நிறையப் பணங்கிடைக்கிறது. இதைக் கொண்டு அவர்கள் செலவுகளைச் சமாளிக்கின்றனர். இது உமக்குத் தெரியாதோ? என்றேன்.

முகத்தாருக்கு இச்சமாச்சாரம் மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கிவிட்டது.

"என்ன சொல்லுறீர்? கொஞ்சம் வெளிச்சமாய்ச் சொல்லும்" என்றார் அவர்.

"ஓய், முகத்தாரே! இங்கிருந்து செல்லும் சில வாலிபர்கள் சீமையிலே பலவிதமான சிறிய வேலைகளைச் செய்து வயிற்றைக் கழுவுவதற்கு வெட்கப்படுவதில்லை. ஊர் பேர் அறியாதவர்கள் மத்தியில் அவர்கள் எச்சிற் கோப்பையையுங் கழுவத் தயார். சப்பாத்துக்கு மைபூசவுங் கூசுவதில்லை. ஆனால் இங்கு வந்து இறங்கியவுடன் அவர்களின் நடையே ஒரு எடுப்பாகி விடுகின்றது. அத்துடன் பெரிய பெரிய இடங்களிலே கொழுத்த சீதனத்துடன் பெண்களைக் கட்டிக்கொடுக்கவும் நீயோ நானோ என்று பண மூட்டைகள் படையெடுத்து விடுகின்றன! என்ன ஆச்சரியம்! சொந்த நாட்டில் இருந்துகொண்டு கௌரவமாக வாழ்பவனுக்கு மதிப்பில்லை. அவனை ஒருவரும் திரும்பியும் பார்ப்பதில்லை. சீமையிலே செல்லாக் காசுகளாக உருண்டு திரிந்துவிட்டு ஊர் திரும்பியவுடன் அவர்களுக்குப் பெரிய 'டிமான்' காணும்" என்றேன்.

"அது சொன்னீரே சரிதான். 'நேச்சர்' அறிந்துதானே இந்த நாளைப் பெண்டுகளும் நடக்கிறாளவை" என்றார் முகத்தார்.

"சீமை என்றால் அது மோட்ச பட்டணமல்ல; அங்குள்ள அலங்கோலங்களை ஏன் பேசுவான். பாருங்காணும், இங்கிருந்து படிக்கச் சென்ற சிலரை அவர்கள் இருக்கும் வீட்டிலிருந்தெல்லோ சென்றவாரம் எழுப்பி விட்டார்கள். சீமையிலும் தமிழ்விழாமாதிரி ஏதோ ஒரு பெரிய திருவிழா நடைபெறப்போகிறதாம். இதற்கு விஜயம் செய்யும் பெரிய புள்ளிகள் தங்குவதற்கு வசதி செய்வதற்காக, இலங்கை மாணவர்கள் இருக்கும் வீட்டை விட்டுக் கிளம்பும்படி வீட்டுச் சொந்தக்காரர் கட்டளை பிறப்பித்திருக்கின்றார்களாம். அந்தப் பிள்ளைகள் பெட்டி படுக்கைகளுடன் வெளியில் இருக்கும் படத்தைப் பத்திரிகையிற் பாரும்" என்று சொல்லி ஆங்கில தினசரி ஒன்றை நீட்டினேன்.

முகத்தார் பத்திரிகையைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டு படத்தைத் தேடலானார்.

※ ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சர்வதேசச் சதிகளுக்கு நிலைக்களம். எனவே, இதனிடமிருந்து எவ்வித நியாயத்தையும காஷ்மீர் மக்கள் எதிர்பார்க்கவில்லையென ஷேக் அப்துல்லா கூறுகின்றார்.

# சர்வதேசச் சதிகள்

## ஐக்கிய நாடுகள் நிலைக்களம்

ஐக்கிய நாடுகள் சங்கம் காஷ்மீர் பிணக்கினை இன்னுந் தீர்த்தபாடில்லை. இச் சிக்கல் எப்போது நீங்குமோ தெரியவில்லை. அந்தரங்கமாகப் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் பாகிஸ்தானுக்கு உதவியளிப்பதே இப்பிணக்கு நீங்காதிருப்பதற்குக் காரணம் என்று காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா தெரிவிக்கின்றார்: கொம்யூனிஸிமானது காஷ்மீருக்கு ஊடாக இந்தியாவுக்குள் நுழைந்துவிடும் என்றும் அதைத் தடுப்பதற்குக் காஷ்மீரைத் தமது ஆதிக்கத்துள் வைப்பதே முறையென்றுங் கருதுகின்றனர். அக்காரணத்தாற்றான் பாகிஸ்தான் சார்பாகப் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் நியாயம் பேசுகின்றனர். இவர்கள் நீதியாக நடந்துகொண்டால் இப்பிணக்கு ஆரம்பத்திலேயே நீங்கியிருக்கும். மேலும் ஐக்கிய நாடுகள் சங்கம் உலக சமாதானத்தை நிலைப்படுத்துவதற்குப் பதிலாக உலக யுத்தத்தைக் கிளப்பும் ஸ்தாபனமாக விளங்கி வருகின்றது. இந்தச் சங்கத்திலிருந்து இந்தியா நன்மை பெறுவது மகா கஷ்டமெனவுந் தெரிவித்தார். பிரித்தாளும் கொள்கையை உடைய பிரிட்டன் காஷ்மீர் சமஸ்தானத்தையுங் கூறுபோட முயல்கின்றது. இதற்குக் காஷ்மீர் வாசிகள் இணங்க மாட்டார்கள் என்றுங் இடமாகக் கூறினர்.

### வரவு செலவு

இந்திய அரசாங்கச் செலவு பன்மடங்கு கூடிவிட்டதாக அறிக்கை ஒன்று எடுத்துக் காட்டுகின்றது. சென்ற வருட வரவு செலவுத் திட்டப்படி அரசாங்கத்துக்கு அதிக வரவும் இலாபமும் ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காத்திராப்பிரகாரம் ஏற்பட்ட செலவுகளால் பெரு நட்டங்கள் ஏற்படுவதாயிற்று. பாகிஸ்தானிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களுக்கு ஊண், உடை, உறையுள் என்பன போதியளவு அளித்து அரசினர் நிலைப்படுத்த வேண்டியதாயிற்று. இதன்பொருட்டு 20 கோடி ரூபா அதிக செலவாக ஏற்படுவதாயிற்று. எனவே, அரசினர் வரவு செலவுகளைச் சமப்படுத்திக் கொள்ளவியலாது தட்டுமுட்டுப்படுகின்றனர். அத்துடன் உணவுப் பஞ்சமும் நாட்டினை எதிர்த்து நிற்கின்றது. போதிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யாவிடின் கொடிய பஞ்சம் தோன்றி நினைப்பருந் துன்பத்தை வருவிக்கும்.

### இடைக்கால் அரசியல்

புதுடில்லியிலே தங்கியிருந்த நேர்பாள மகாராஜா இப்போது தமது சொந்த நாடாகும் நேர்பாளம் திரும்பி விட்டனர். இந்திய அரசினர் முயற்சியால் ஏற்பட்ட சமாதானம் பெரு நன்மையைக் கூட்டி வைத்ததாகும். நேர்பாளத்திலுள்ள எல்லாக் கட்சியினரும் மகாராஜா அவர்களை அன்புடன் எதிர்கொண்டு வரவேற்றனர். விரைவில் இங்கே சனநாயக அரசியல் அமைக்கப்படும். இப்போது அரசியலை நடத்த ஓர் இடைக்கால மந்திரிசபை அரசரால் ஏற்படுத்தப்பட்டது. இந்த மந்திரிமார்கள் சகல கட்சிகளையும் சேர்ந்தவராவர். இம் மந்திரி சபையினர்க்கு அரசரே பொறுப்புடையர். கலகம் காரணமாகச் சிறையில் வைக்கப்பட்டோர் விடுதலை பெற்றனர். புதிய அரசியற் றிட்டம் விரைவில் வகுக்கப்படும்.

### மந்திரியார் மரணம்

இந்தியாவின் போக்குவரத்துப்பகுதி உதவி மந்திரியாகக் கடமையாற்றிவந்த ஸ்ரீ குர்ஷிதலால் அவர்கள் இருதய நோய் காரணமாக உயிர்துறந்தனர். இதையறிந்து டில்லி மாநகரம் துயரக் கடலில் ஆழ்ந்தது. இவர் கண்ணியம் மிக்க காங்கிரஸ் தொண்டர். பன்முறை சிறைவாசம் அனுபவித்தவர். அறிவிலும், ஆற்றலிலும் வல்லவர். மந்திரிப் பதவியை மிகத் திறமையாக வகித்து அநேக திருத்தங்களை நிலைபெறச் செய்தனர். பதவிகளையும் பட்டங்களையும் நாடாது உயரிய தொண்டினைப் பெரிதாக மதித்துக் கடமையாற்றிவந்தனர். இவர் பிரிவு பெரிய திகிலை உண்டு பண்ணிவிட்டது. இறக்கும் பொழுது வயது 48. அரசியல் அமைப்புச் சபை அங்கத்தினராகத் தெரியப்பட்டவர். பின் இந்திய அரசினர் இவரது பெரிய சக்தியைக்கண்டு உதவி மந்திரியாராக நியமித்தனர்.

### ஒற்றுமை அவசியம்

பல கஷ்டங்கள் நாலாபக்கங்களாலும் வந்து வருத்தும் இச்சமயத்தில் இந்தியாவில் ஒற்றுமையும் உழைப்பும் அவசியமெனப் பிரதமர் நேரு உத்

#### இந்தியா

தரப் பிரதேசத்தில் நடந்த பெரிய கூட்டமொன்றில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். கட்சி பேதங்கள் பிணக்குகள் தோன்றின் நாட்டின் நல்விருத்திக்குத் தடைதாமதம் ஏற்படக்கூடுமென்றார். மேலும் இந்தியாவின் அரசியலை நடாத்தும் காங்கிரஸ் கட்சியினர் தம்முட் பிணக்குப்படின் தேச முன்னேற்றம் தடைப்படாதா என்றுகேட்டனர். அத்துடன் தமது பேச்சில் பலாத்காரமாகப் புரட்சிகளைக் கொண்டுவர முயலும் கொம்யூனிஸ்ட் கட்சியை மிக ஆணித்தரமாகக் கண்டித்தும் பேசினர். இந்தியாவில் வெட்டுக் கொத்து, இரத்தப் பெருக்கு என்பன ஏற்படத் தாம் விடமுடியாதென்றார். அப்படியாயின மகாத்மா அவர்கள் காட்டிய அஹிம்சை வழியை விட்டு மேலைதேசத்தவரின் பிழையான கொள்கைகளை ஏற்பதாகுமே! அபேதவாதத்தைத் தான் மாகாத்மாவும் விரும்பினர். ஆனல் அதனைப் படிப்படியாக, மக்களின் மனமாற்றத்துடன் பெறுவதன்றித் தடியடியால் அல்லது பலாத்காரக் கொள்கைகளால் நிலைநாட்ட முடியாதெனவும்தெரிவித்தார்.



கொழும்பு கலாபவனம் ஆதரவில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவம் வெள்ளவத்தை சம்மாங்கோடுப் பிள்ளையார் கோயிலில் அடுத்தமாதம் 2, 3, 4 திகதிகளில் நடைபெறும். 4-3-51 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்குக் காரைத்தினம் வி. வி. சடகோபன் பி. ஏ அவர்களின் இசைச்சச்சேரி நடைபெறும். அன்று சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் விழாவைத் திறந்து வைப்பார்.

## யுத்தப் பேச்சு?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கினல் ருஷியாவுக்கு ஏதும் நன்மை ஏற்படக்கூடுமென்பது ஸ்டாலினின் அந்தரங்க நோக்கம்போலும்.

அடுத்த மாதம் முற்பகுதியில் வல்லரசுகள் எனப்படுவார் நால்வரும் கூடிப் பேசவிருப்பதால் ருஷியாவுடன் அவர்கள் சமரசமாக நடந்துகொள்வதற்காகத் தமது கண்டனம் ஒரு சாதனமாக அமையுமென ஸ்டாலின் கருதினரோ, என்னவோ?

அமெரிக்காவையும் பிரிட்டனையும் யுத்தவெறி கொண்ட நாடுகள் எனக் குற்றஞ்சாட்டும் ஸ்டாலின் ருஷியாவின் இரும்புத் திரையையும் சற்றே நீக்குவாராயின் ருஷியாவிடம் உலகப் போருக்கான மாபெரும் படைப்பலம் இருக்கின்றதோ என்பதை அறிந்து கொள்ளலாம். ருஷியாவின் போக்கு அகில உலகத்துக்கும் மிகுந்த பீதியை உண்டாக்கிவருகின்ற தென்பதை மறுக்கமுடியாது.

அதேபோன்று அமெரிக்காவின் அணுக்குண்டுப் பலமும் உலகின் பல பாகங்களிலும் அது அமைத்துவருகின்ற விமானப்படைத் தள வசதிகளும் ருஷியா உட்படச் சகல மக்களுக்குங் கவலையை உண்டாக்கிவருகின்றன.

# உலகநிலை படுமோசம்

## பகட்டுகளில் மயக்கம்

... யோகி சுத்தாநந்த பாரதி ...

நான் வெளியே வந்து புதுயுக நிலையத்திற்புகுந்ததைப்பற்றி மகிழ்ச்சி தெரிவித்துப் பலர் எழுதியிருக்கிறார்கள். அனைவருக்கும் நன்றி. அழைப்புகள் எட்டுத் திசைகளிலிருந்தும் ஏராளமாகக் குவிகின்றன. ஒருமுறை தமிழகத்தில் சுற்றியும் வந்தேன். காலநிலை விபரீதமாயிருக்கிறது. எங்கும் வறுமைத் துயர்! மடமையிருள்! வஞ்சகப்பேய்கள் நடமாடுகின்றன! சமுதாய ஒற்றுமை இல்லை. தேசபக்தி கூடத் தெய்வ பக்தியைப்போலவே குறைந்துவிட்டது. கட்சிப் பிரிவினைகள் அமைதியைக் கெடுக்கின்றன. இப்படியிருக்கும் காலநிலையில் சிறந்த ஆத்மீக அனுபவங்களைப் புகட்டுதல், பட்டினி கிடப்பவனுக்குப் பாட்டுக் கச்சேரி வைப்பதுபோல் ஆகும். ஆதலால் முதலில் நானே உணவுப் பிரச்சினையைத் தீர்க்கப் புகுந்தேன். நான் இருக்கும் 'பாரதி மில்' நிலையத்தில் வாழை, நெல், புல், காய்கறிகள் போட்டிருக்கிறோம். இங்கே பயிராகும் காய் கனிகளையே சாப்பிடுகிறோம். புல்லைத் தின்று பசு பாலைத் தருகிறது. அதைப் பருகுகிறோம். ஒரு அச்சகம் வைக்க ஏற்பாடு நடக்கிறது. ஒரு பத்திரிகையும் நடக்கும். இவற்றால் பொது நலம் புரியலாம்.

### இலங்கை விஜயம்

சமீபத்தில் இலங்கை செல்வதாகப்புறப்பட்டேன். மகான் ஸ்ரீ அரவிந்தர் காலத்தை வென்றார். மனச்சாட்சி நில் என்றது. மேலும் யோகத்தில் ஒரு பெரிய உச்சநிலையை எட்டிப் பிடித்திருக்கிறேன். அதிலேயே லயித்திருப்பவர் பிரயாணம் செய்வது உசிதமில்லை. இலங்கையில் எல்லா ஏற்பாடுகளும் செய்ய முனைந்தனர். பயணத்தைத் தள்ளி வைத்திருக்கிறது. மலாய் யாத்திரையும் சரியான காலம் நிதானித்தே நடக்கும். ஒரு காரியததைப் பயன்படச் செய்யவேண்டுமானால், இடம் காலம் பயன் எல்லாம் அறிந்தே முனைய வேண்டும்.

உலக நிலை படுமோசமாகி வருகின்றது. அணு வெடிக்கு அப்பனாக நீரவெடி, அதற்குப் பாட்டனாக காஸ்மிக் வெடி புறப்படுகிறது. கொரியா லீலை பயங்கரமான மூன்றும் போராக முற்றலாம். ஐரோப்பா கொதித்துக்கொண்டிருக்கிறது. சமாதானம் சமாதானம் என்று சொல்லிக்கொண்டே சில நாடுகள் குண்டுகளைக் குவிக்கின்றன. வல்லரசுகளின் பேச்சுக்களே அணுக்குண்டின் அல்பாக்கதிர் போலச் சுடுகின்றன. நம்மவர் வாழ்வைக்காலத்துக்கேற்றபடி திருத்திக் கொள்ளல்வேண்டும். பணம் நிலையில்லை. பணம் உள்ளவர்கள் தொழிலிற் போட்டுத் தாமும் பிழைத்துப் பலருக்கும் பிழைப்பைத் தரவேண்டும். நிலம் இருப்பவர் காலததிற்கேற்ற முறையில் பயிர் செய்யவேண்டும். வாழ்வில் பயனுகும் தொழில் முறைக் கல்வியை எல்லாரும் கற்கவேண்டும்.

### உயிர்க்கனல்

உலக நிலை, மாற்றமும் ஏமாற்றமும் கொண்ட சூதாட்டமா யிருக்கிறது. எதை நம்ப வேண்டுமோ அதை மனிதன் நினைப்பதேயில்லை. முதலையை நம்பி ஆற்றில் இறங்கியவன் போல், மனிதன் உலகப் பகட்டுகளில் மயங்கி மாயா சக்தி வெள்ளச் சுழலிற் சிக்கி அல்லலுறுகின்றான். இறைவன் ஒருவன் உண்டு. அவனே உள்ளந்தோறும் இருக்கும் உயிர்க்கனல் என்பதை மனிதன் உணர்ந்து மனத்தை உள்ளே இருப்பவேண்டும். தியானம் பழகவேண்டும். நல்லார் உறவும் நன்னூல் ஆராய்ச்சியும் செய்யவேண்டும்.

கிழக்குத் தபால்

## கல்லடி நீர்த் திட்டம்

மட்டக்களப்பு, 22-2-51

மட்டக்களப்பின் தற்போதைய குடிநீர்த் திட்டத்தைத் திருத்தியமைப்பது பற்றிக் கடந்த பதினைந்து வருடகாலமாக மத்திய அரசாங்கத்திற்கும், பட்டின சபைக்குமிடையிற் பேச்சுவார்த்தை நடந்து வருகின்றது. இதன் விளைவாகக் கல்லடிக் குடிநீர்த் திட்டத்தை மூன்று பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவாக நிறைவேற்றுவ தென்று இரு பகுதியாரும் கூடிய மகாநாட்டில் முடிவாயிற்று. இது விஷயத்தில் எதுவித அபிவிருத்தியும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இதனைப் பட்டின சபை சென்ற மாதக் கூட்டத்தில் எடுத்துக் காட்டியதுடன், இவ் விஷயத்தில் மந்திரிகளைப் பேட்டி காண ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்பியுள்ளது. அவர்கள் 20-ந் திகதி ஸ்தல ஸ்தாபன மந்திரியைப் பேட்டி கண்டிருப்பார்கள். இப் பேச்சுவார்த்தைகளில் இத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

### நகரமண்டபம்

மட்டக்களப்பில் நகரமண்டபம் அமைப்பதற்கு ஸ்தல அபிவிருத்திக் கடன் குழுவினர் வேண்டிய பணத் தொகையை அனுமதித்துள்ளார்கள். இதேநேரததில் நகர சபை மண்டபமமைப்பதற்கான விண்ணப்பங்களைப்பெற்றுத் தயாராக வைத்திருக்கிறது. எனவே குறைந்த விண்ணப்பக்காரர் அனுமதிக்கப்பட்டு விரைவிற் கட்டடவேலை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### தமிழ் மன்றம்

தமிழ் மன்றம் தொடர்ந்து தனது தமிழ்ப்பணியை ஆற்றிவருகின்றது. சென்ற வருடம் மனோன்மணீயம் பற்றி ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்துவித்தார்கள். இவ் வருடம் தேம்பாவணியைப்பற்றி வித்துவான் ஸி. நடராசா அவர்களைக்கொண்டு பிரசங்கங்கள் செய்வித்து வருகின்றார்கள். வித்துவான் தமது ஆராய்ச்சியினால் தமிழபிமானிகளை மகிழ்வித்துவருகின்றார்.

தவிர இம் மன்றம் மட்டக்களப்பின் நாடோடிப் பாடல்களைச் சேகரித்து வெளியிடவும் ஏற்பாடு செய்துவருகின்றது.

— நமது நிருபர்




**கம்பர் கவிதைக் கோவை:** 1-ம் பாகம்—ஆசிரியர்: அ. சே. சுந்தரராஜன் பி. ஏ., (ஆசிரியர், இராமநாதன் கல்லூரி, சுன்னுகம்). நூலாசிரியரிடம் இந்நூல் கிடைக்கும். விலை: ரூபா 4-0-0.

கம்பர் கவிதைக் கோவை முதலாம் பாகம் என்னும் இந்நூல், பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம் என்னும் மூக்காண்டங்களினின்றும் தெரிந்தெடுக்கப்பட்ட சுவையும் நயமுமமைந்த 507 கவிதைகளையும், அக் கவிதைகளின் குறிப்புரைகளையும், ஒவ்வோர் படல ஆரம்பத்திலும் ஆரம்பக் குறிப்புக்களையுங் கொண்டது.

இந்நூலைப் பார்த்தவுடன் 'கம்ப ராமாயண இன்கவித்திரட்டு' (வெ. ப. சுப்பிரமணிய முதலியார்) என்னும் நூல் ஞாபகத்துக்கு வரலாம். ஆயின் இவையிரண்டும் தம்முள் வேறுபாடுடையன 'கம்ப ராமாயண இன்கவித்திரட்டு' இராமாயணச் செய்யுள்களைப் பின்பற்றிச் சில இனிய செய்யுள்களையும், விடப்பட்ட செய்யுள்களின் கதையை வசனமாகவும் கொண்டது.

இந்நூல் கதையைத் தொடர்ச்சியாகக் கூறிச் செல்லாது படல ஆரம்பத்தில் படலப் பொருளைத் தொகுத்துச் சொல்லி, அவ்வப் படலச் செய்யுள்களின் சொற்றொடர்களைத் தொகுத்து நயம்படக்கூறி, ஆராய்ச்சித் தன்மையுடன் உய்த்துணர்விக்கும் தன்மை அமைந்து, தெரிந்தெடுக்கப்பட்ட செய்யுள்களை அவ்வப் படலப் பின்னணியாகக் கொண்டு செல்வது. இதனுல் இந்நூல் மாணவர்க்கு அதிகம் பயன்தராது கம்பராமாயணத்திற் சிறிது பயின்ருர்க்கு அதிகம் பயன்தர வல்லது.

இந்நூலாசிரியரது கம்பராமாயணப் பயிற்சியும், வைஷ்ணவ சம்பிரதாய அறிவும் செய்யுள் குறிப்புக்களிலிருந்தும் ஆரம்பக் குறிப்புக்களிலிருந்தும் புலனுகின்றன.

'வேரியங்கமலை நோக்கும் காரணம் (பக். 4); கோசிக முனிவன் வரலாற்ருல் குறிக்கப்படும் பொருள் (பக். 25); தாடகையின் கோபவளர்ச்சி இயல்பு (பக். 39); சீதாபிராட்டியின் அழகைச் சூர்ப்பனகை வர்ணித்த முறையுடன் மிதிலைக் காட்சிப்படல வர்ணனை முறையை ஒப்பிட்ட சிறப்பு (பக். 193) முதலியன நயந் தருவன.

பிழைதிருத்தங்களுள் அகப்படாது இன்னும் சில அச்சுப்பிழைகள் தங்கிவிட்டன. (பக். 15)

பாடபேதங்களிலும் ஆசிரியர் அதிக கவனம் செலுத்தவில்லைப்போலும். (உ-ம்:) பாடல் 47-ல் 'கற்பகநாட்டணிநகர்' என்பது 48-ம் பாடலை நோக்குழி 'கற்பக நாட்டணிகவர்' எனக் குமாரசுவாமிப்புலவர் பதிப்பிற் கமைய இருத்தல் தகுந்தது எனத் தெரியவரும்.

நூலாசிரியரது முகவுரையும், பதிப்பழகும் வேண்டும்.

— வ. நடராஜா

●

**சூரியகாந்தி: 14 சிறு கதைகள்'** ஆசிரியர்: ந. சிதம்பர சுப்ரமண்யன். பிரசுரம்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை 5. விலை ரூபா 2-0-0.

சில வாழ்க்கை உண்மைகளையும், சில வேதாந்தக் கருத்துகளையும் சிறு கதை மூலமாக்கிப் புனையப்பட்ட 14 சிறுகதைகளைக்கொண்ட சிறு தொகுப்பு இது. எழுத்துலகிற் பிரபல்யமடைந்த எழுத்தாளரின் கதைகள் என்பதற்காக, அனைத்தையுமே உயர்தரம் என்று கூறிவிட முடியாது.

ஆசிரியரது அதிதகற்பனையில் மலர்ந்த கதைகளில் முதற் கதையான "இரட்டைத் தாமரை" ரசிக்கத்தக்கது. உயர்ந்த தத்துவமும் நடையழகும் கொண்டது. காவியப் பண்புகூட்டி வளர்த்த 'சசாங்கனின் ஆவி", 'பாதபூஜை' என்னும் இரண்டும் நல்லவை. நடையழகிலும் கருத்தழகிலும், கதையோட்டத்திலும் சிறந்தவை. மனதிற்கு மகிழ்வூட்டுபவை. சாதாரண வாழ்க்கை யனுபவத்தில் முளைவிட்ட "பூஜையும் போதையும்", "கொலைகாரன்" இரண்டையுமே சிறுகதைகள் என்றுசொல்ல முடியும். அவைகளில்தாம் விறுவிறுவென்ற கதையோட்டமும் கதைப்பண்பும் அமைந்து கிடக்கின்றன. "புவனேஸ்வரி" என்ற கதை சுமாரானது. ஏனைய கதைகளிற் சிறுகதைக் கிருக்கவேண்டிய முக்கிய அம்சமான "கனம்" இல்லை. வெறும் வாழ்க்கைச் சம்பவத்தை அப்பட்டமாகக் கூறி விடுவதனுல் சிறுகதை உருப்பெற முடியாது. அச் சம்பவங்களின் அமைப்பும் பின்னலும்தாம் கதைக்கு ரசனை யூட்டுபவை. இந்த அம்சங்கள் மற்றக் கதைகளில் குறைந்தமைதான் அதற்குக் காரணமாக இருக்கலாம். எனவே, சில சிறுகதைகளைத் தவிர மற்றவை யாவும் பொழுதுபோக்குக் கேற்றவை என்றேகூறலாம். பதிப்பாசிரியர் கூறுவது போல் எல்லாமே சிரஞ்சீவிக் கதைகளல்ல.

ஆங்காங்கு சிலஎழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. திருத்தப்பட்டிருப்பின் நன்று. கண்ணைக் கவரக்கூடிய அழகான பதிப்பு.

— சு. வே:

●

**நிராசை:** ஆசிரியர்: ஆர். வி. பிரசுரம்: சரசுவதி பிரசுரம், சென்னை. கிடைக்குமிடம்: தமிழ்ச் சுடர் நிலையம், 2/24 பைக்கிறவ்ற்ஸ் ரோடு, சென்னை 5; விலை ரூபா 2-0-0.

"முடிக்கும்வரை எனக்கு நிராசை ஏற்படவில்லை; பாத்திரங்களில் யாருக்கு என்ன நிராசை ஏற்பட்டால் என்ன?" என முன்னுரை ஆசிரியர் தி. ஜ. ர. கூறுவது வெறும் உபசாரமன்று, உண்மை. படிக்கத் தொடங்கியதும், கதை, சமபவங்களில் புரண்டு, உணர்ச்சிகளைப்பிரதிபலித்து நிமிர்ந்துசெல்கிறது.

பணக்காரனும் தொழிலிலே திறமை கொண்டவனுமாகிய சங்கர், அறிவும் ஆற்றலும் நிர்வாகத்திறமையும் கொண்டவனுமாகிய ரவியிடம் அன்பு செலுத்தி அவனை ஆதரிக்கிருன். இளமைத் துடிப்புக்கொண்ட இலட்சிய வீரனுன ரவி, இளம் விதவையான ஸீதாவைச் சந்திக்கிருன்; பழகுகிருன்; காதல் மூழுகிறது. ஸீதாவே ரவியின் உயிர்; அவளின்றி அவனுக்கு இயக்கமில்லை; அவளே அவனின் உணர்ச்சி ஊற்று. ஆனல் விதவை என்று உலகம் ஈந்த போலிப் பட்டத்தை உதறித் தள்ளத் துணிவற்று அவன் தயங்குகிருன். அந்தத் தயக்கம் அவன் மனதில் நிராசையாகப் படருகிறது. அவளையடைய அவன் எதையும்—அத்தியந்த நண்பனுன சங்கரைக்கூட—தியாகஞ் செய்யத் தயங்கவில்லை. ஆனல் அவன் காதில் உலகின் கூக்குரல் எதிரொலிக்கிறது. இவ்விதம் சுவாரஸ்யமாக ஓடுகிறது கதை.

ரவி, சங்கர், ஸீதா என்னும் மூன்று பாத்திரங்களுக்கும் உயிரூட்டி, உணர்ச்சி சேர்த்து நடமாட விடுகிருர் ஆசிரியர். அம் மூவரின் மூன்றுவிதமான மனப் போக்குகளும் அப்படியே படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. காதல் கதை பேசிக் களித்த ரவியின் மனதில் நிராசை வித்து முளைத்து விருக்ஷமாக வளருகிறது இந்த வளர்ச்சியைச் சித்திரிப்பதில் ஆசிரியர் வெற்றியடைந்திருக்கிருர். சரளமான சம்பாஷணை கதைக்குச் சிறப்பளிக்கிறது. அவருக்கே சொந்தமான பண்பட்ட நடை இதிலும் பிரகாசிக்கிறது. விதவையைக் கதா பாத்திரமாக்கி எழுந்த நாவல்களுள்ளே இது ஒரு புதுவிதம். நல்ல நாவல்! அனைவரும் படிக்கவேண்டிய நாவல்; பதிப்பு நல்லதென்று உறுதி கூற முடியாது.

— சு. வே.

●

**காவியக் காதல்:** பதிப்பாசிரியர்: வை. கோவிந்தன்: பிரசுரம்: சக்திகாரியாலயம், ராயப்பேட்டை, சென்னை; விலை: ரூபா 1-4-0.

இந்நூலில், ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அவர்களைப் பற்றிய அருமையான கட்டுரை ஒன்று ஸ்ரீ எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களால் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கட்கும் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகட்கும் இடையில் எழுந்த அருட்பா—மருட்பா விவகாரத்தைப் பற்றிக் கூறும் பகுதியில் ஸ்ரீலஸ்ரீ நாவலரின் பெருந்தன்மை எடுத்துக் காட்டப்படுகிறது. ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கை, அவரது இலக்கியம் என்பனபற்றி ஸ்ரீ வையாபுரிப்பிள்ளையவர்கள் இனிய தமிழில் சிறப்பாக எழுதியுள்ளார். இக் கட்டுரை, நூலுக்குக் கிரீடம் போல அமைந்துள்ளது.

மகளைச் சந்தேகித்த தாய் கேட்கும் பல கேள்விகளும் அவற்றுக்கு மகள் சாதுரியமாகச் சொல்லும் பதில்களும் அமைந்த 'ஏசல்' பகுதி இரசமாயிருக்கிறது. ஸ்ரீ ல. சண்முகசுந்தரம் எழுதியுள்ள கம்பரின் 'இந்திரஜித்து', 'காவியக் காதல் 'ஏழு கதைகள்', காவியக் காதல் என்ற கதை, பஞ்சப் பாட்டு என்ற நாடகம்—எல்லாம் மிக நன்ருயமைந்திருக்கின்றன. பஞ்சபபாட்டு என்ற நாடகம் தமிழ்ப்புலவர்களது பரிதாபமான பிழைப்பை நகைச்சுவையுடன் வர்ணிக்கிறது.

— விவியன்.

●

**AZ—ZAHIRA – 1951** *Chief Editor*: S. M. KAMALDEEN, B. A., Zahira College, COLOMBO.

அஸ்—ஸாஹிரா எனப் பெயரிய கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆண்டு மலர் அழகாக வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலுங் கட்டுரைகளும், கவிதைகளும் கல்லூரி விபரங்களும் வெளியாகியுள்ளன. ஸாஹிராக் கல்லூரியிற் பல்வேறு சந்தர்ப்பங்களிற் பிரமுகர்களாலும் கல்வி நிபுணர்களாலும் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் மலரிலே தொகுக்கப்பட்டுள்ளன. ஏனைய கட்டுரைகள் படிப்பதற்குச் சுவையூட்டுவனவாக இருக்கின்றன. சிங்கள நாடகத்தின் இன்றைய நிலைமையைப் பற்றி ஸ்ரீ சரத் சந்திரா அவர்கள் மிகத் தெளிவாக எழுதியிருக்கின்ருர். கல்லூரி அதிபர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் கல்வி, கலை சம்பந்தமாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் மிகச் சிறந்தன. தற்கால அமெரிக்கக் கவிதை நயம்பற்றி ஸ்ரீ குருவில்ல அவர்கள் ஆராய்ந்திருக்கின்ருர்.

தமிழ்க் கட்டுரைகளுங் கவிதைகளும் குறிப்பிடத்தக்கன. ஆசிரியர் எஸ். எம். கமல்தீன் அவர்கள் ஈழத்து முஸ்லிம் புலவர்களைப்பற்றி எழுதியுள்ள கட்டுரை இலக்கியச் சுவை வாய்ந்தது.

கல்லூரியின் முக்கிய நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டும் புகைப்படங்கள் மலருக்குத் தனிச் சோபையை அளிக்கின்றன. கல்லூரி அதிபர் ஜனுப் அஸீஸ் அவர்களின் தமிழ்ப்பற்றும் ஆசிரியர்களின் தமிழ் ஆர்வமும் ஸாஹிராக் கல்லூரியின் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றனவென்றே கூறவேண்டும். மலர் ஆசிரியர்களான கமால்தீன் அவர்களையும் கபூர் அவர்களையும் பாராட்டுவதுடன்,

"விரிந்த புகழின் திருத்தாயே!
விளங்கு மலரே! மங்கலமே!
மேதக் கவளே! ஸாஹிராவே!
விறலின் வாழி! வாழியவே!"

என்று முதுதமிழ்ப்புலவர், மு. நல்லதம்பி அவர்கள் வாழ்த்துவது போல ஸாஹிரா நீடுவாழியென வாழ்த்துகின்றோம்.

●

**சோஷலிஸ்ட் தத்துவங்கள்:** ஆசிரியர்: ப. ஜீவாநந்தம். பிரசுரம்: மோஷன் & பாட் பிரசுராலயம், 116 கோட்டடித் தெரு, கொழும்பு; விலை சதம் 60.

பேச்சிலும் எழுத்திலும் இன்று சோஷலிஸம் பெருகி வருகின்றது. எல்லோரும் சோஷலிஸம் பேசுவதால் அதன் தத்துவத்தையே நன்கு அறிந்து கொள்வது மகா கஷ்டமாக விருக்கின்றது. இந்நிலையில், விஞ்ஞான சோஷலிஸமாகிய மார்க்ஸிய சோஷலிஸத்தைப் பற்றித் தமிழ் மக்களுக்கு விளக்கும் நோக்கத்துடன் இந்நூல் வெளியாகியுள்ளது. ஆசிரியர் இலகுவான தமிழில் இதை எழுதியுள்ளார்.

க. ச.

●

**தமிழ் நாட்டு விபாகங்கள்:** பிரசுரம்: கதர்மலர் — ஸர்வோதய பிரசுராலயம், வீரபாண்டி, திருப்பூர்; விலை அணு 2.

தமிழ்நாட்டின் பல பிரிவுகளிலும் சுயதேவைக் கதரியக்கம் பரவி வருகின்றது. ஒவ்வோர் விபாகிலும் காதிவஸ்திராலயங்களுள. உதாரணம்: திருநெல்வேலி, மதுரை, தஞ்சை, சென்னை, கோவை என்பன.

சுயதேவைப் பூர்த்தியே இவற்றின் இலட்சியமாகும். அதிக விலை கொடுத்துக் கதர் வாங்கும் தியாகத்திலும் விடத் தத்துவமறிந்து நூற்றுக் கதர் அணிவதற்கு மிகுந்த தியாகம் அவசியமாகும். இவற்றையெல்லாந் தொண்டர்களுக்குங் கதர் அபிமானிகளுக்கும் இச்சிறு பிரசுரம் விரிவாக விளக்கியுள்ளது.

---

நமது வாசிகசாலையில் விமர்சனத்துக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

---

# சுத்த சன்மார்க்க மகளிர் இல்லம்

யாழ்ப்பாணம் பெண்கள் தேச ஊழிய சங்கத்தின் தலைவி ஸ்ரீமதி மா. மங்களம்மாள் எழுதுவதாவது:

எமது நாட்டில் பெண் மக்கட்கு ஏற்படும் கஷ்டங்கள் பல. விவாகம் ஆகப் பெருத வயசுவந்த கன்னியர்கள், விவாகமாகப்பெற்றுக் கணவனுற் கைவிடப்பெற்றுள்ள பெண்கள், பால்ய விதவைகள், மறுமணம் புரிதற்கு விரும்பாதோர், வயோதிப விதவைகள், அனுதைகள், திக்கற்றவர், இன்னும் பலவாருன எமது சகோதரிகளின் பரிதாப நிலைமையை அகற்றுவது மிகவும் அவசியமாகும். இவற்றைப் போக்குவதற்காகப் பெண்களாகிய நாமே பெரிதும் முயலுதல் வேண்டும்.

ஏழைப் பெண்களும் பணமுடைய பெண்களும் ஆங்காங்கு துன்புற்று இன்னல்கட் குள்ளாகி வருகின்றனர். இவர்களிற் பெரும்பாலானேர் மானத்துடன் வாழ இயலாதவர்களாய்த் தத்தளிக்கின்றனர். பெற்ருேராலும் இவற்றிற் கெவ்வித வழிவகைகளும் காணப்படுவதற்கில்லை. எனவே வாழ்க்கைப் போராட்டத்தில் தோல்வியடைந்துள்ள இவர்களுக்கு, ஆறுதலையும் மனச் சாந்தியையும் அளிக்கக்கூடிய ஒரு வசதியை உண்டுபண்ணுவதற்குப் பெண்களாகிய நாம் முன் வருதல் வேண்டும். மானம் மரியாதையைக் கைவிட முடியாதவரான மகா உத்தமிகளாவோரின் துன்பத்தைத் துடைக்க நாம் வழிவகை காணவேண்டும். சுத்த சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுபவரான உத்தமிகள் ஒருங்கு கூடி ஒவ்வொருவரின் விருப்புக்கேற்ற சீவியத்தை மேற்கொள்ளப் பெறுவதற்கான ஓர் இல்லத்தை நிறுவுதல் அவசியம்.

யாழ்ப்பாணத்திலுள்ள பெண்மக்கள் அநேகர் இதற்கான உதவிகளைச் செய்வதற்காக முன்வந்துள்ளனர். இவ்வில்லில் வசித்து வருதற்காகிய பெண்மக்களும் ஆங்காங்கு காணப்பெறுகின்றனர். எனவே, இந்நிலையமானது எந்த இடத்திலே தாபிதமாவது உசிதமானதென்பதை நாம் முதலாவதாக நிர்ணயித்தல் வேண்டும். இலங்கையிலுள்ளோர் அனைவருக்கும் திருப்தி தரக்கூடிய வகையில் இடம் அமைதல் வேண்டும். கொழும்புப்பகுதியிலே தாபிதமாவதே உசிதமென ஒருசாரார் கருதுகின்றனர். யாழ்ப்பாணத்திலே தாபனமாவதே உசிதமாகுமென வேறு சிலர் கருதுகின்றனர். ஆதலால் இவைகளையெல்லாம் நன்கு ஆலோ

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

★ பத்திரிகைப் புலி சோணாசலத்தார் புதிய சரடு விட்டுக்கொண்டு வந்து சேர்ந்தார்.

❋ இக்கற்களே எங்கள் அரசாங்கத்தின் புதிய இரகசிய ஆயுதம் என்றும், அவற்றை அடிக்கடி பரீட்சித்துப் பார்க்கிறார்களென்றும் சொல்லி என்னை ஆச்சரியத்தில் மூழ்க வைத்தார்.

# பறக்கும் செங்கல்

பறக்கும் செங்கல் சிலகாலமாகத் தோன்றி மறையும் விந்தை கிராமவாசிகளிடையே மிகுந்த பீதியையும் பரபரப்பையும் உண்டாக்கிவந்தது. இதனை ஆராய்ந்து விசாரணை செய்யும் பொறுப்பைக் கிராம வாசிகள் நடமாடியார்மீது சுமத்தினர். அவர் நடாத்திய ஆராய்ச்சியின் விளைவாக வெளிவந்த சில அதிசயமான முடிபுகளை இங்கு படிக்கும்போது ஆச்சரியம் உண்டாகாமல் இருக்க மாட்டாது.

— ப-ர்

கிராமப் பெரியோர்கள் பணித்த கட்டளையானது எனது சக்திக்கு அப்பாற்பட்டதாகத் தோன்றியபோதிலும் கிராமவாசிகளின் பீதி உச்சநிலையை யடைந்திருந்ததென்று அப்பொழுது நான் அறிந்திருந்தேன். இதுவே மற்றைய காரணங்களெல்லாவற்றையும் விட என்னை இப்பணியை ஏற்கத் தூண்டுகோலாக விருந்தது. கிராமவாசிகளோ நாளுக்கு நாள் நாட்டைவிட்டுக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். எனக்கோ விசாரணை நடாத்தவேண்டிய விஷயமானது ஆரம்பத்தில் மிகுந்த சிக்கலானதும் மனித சக்திக்கப்பாற்பட்டதுமாகத் தோன்றித் திகைக்க வைத்தது. எவ்வளவு சீக்கிரத்தில் என் விசாரணை சித்தியடைந்ததோ அவ்வளவு சீக்கிரத்தில் என் கிராமத்தாருக்குப் பணிசெய்தவனாவேனென்பதை நான் நன்கு உணர்ந்திருந்தேன். இம் முயற்சியில் ஆங்காங்கு உதவிபுரிந்தும் எனக்கு விளங்காத விஷயங்களைத் தங்கள் நுண்ணறிவினாலும் ஆழ்ந்த அனுபவத்தினாலும் விளக்கிய பத்திரிகைப் புலி சோணாசலமவர்களுக்கும் பேராசிரியர் கிருஷ்ணனவர்களுக்கும் ஏனையோருக்கும் எனது நன்றி.

## கல்போன்ற வஸ்து

பறக்கும் செங்கல் என்றால் என்ன? கிராமத்தின் பல கோடிகளிலும் காலத்திற்குக் காலம் இரவு நேரங்களில் ஆகாயத்திலிருந்து பூமியை நோக்கி அதி விசையுடன் கல்போன்ற வஸ்துக்கள் பல விழுவதைப் பலர் கண்டிருந்தனர். இவ்வஸ்துக்கள் ஏககாலத்திற் பலவிடங்களில் விழுவதில்லை. சிலவிடங்களில் மாலைநேரங்களிலும், சிலவிடங்களில் அர்த்த இராத்திரியிலும் இன்னும் பல விடங்களில் அதி விடியற் காலையிலும் விழுந்ததாக அனேகர் உறுதி கூறினர். நேரிற் கண்ட பலர் கடித மூலமும், இன்னும் சிலர் சமுகந்தந்தும் விளக்கினர். சில வேளைகளிற் பேசுந்தந்தியில் என்னைக் கூப்பிட்டு உடனே வரும்படியும், பல கற்கள் விழுகின்றனவென்றும் சிலர் பணிப்பார்கள். ஓடோடியும் சென்றால் அங்கு அவை நின்றுவிடும்.

இப் பறக்கும் செங்கற்களைப்பற்றிய வர்ணனைகளோ ஏட்டிலடங்கா. சிலர் அவை வரும்போது அதிக சத்தம் செய்கின்றனவென்றும், இன்னும் சிலர் அவற்றிலிருந்து ஒருவித ஒளி பிரகாசித்ததென்றும் வேறு சிலர் அவைகள் விழும்போது ஒருவித சுழலிலகப்பட்டன போன்று சுழன்று சுழன்றே விழுந்தனவாம் என்றும் சொன்னார்கள். அவர்களைத் தீர விசாரித்ததிற் சாட்சியங் கூற வந்தவர்களெல்லாரும் கேள்விச் செவியராகவிருந்ததோடு நில்லாமல் தங்கள் கற்பனா சக்தியையும் நன்கு உபயோகித்தனர் என்று தெரியவந்தது. இப்படியே துண்டந் துண்டமாக இழுபட்டுக்கொண்டிருந்த என் விசாரணையில அதிர்ஷ்டம் குறுக்கிடாமலில்லை. ஒருநாள் ஒரு மாணவன் பறக்கும் செங்கல் தன் வீட்டிற் கணித்தாக விழுந்ததாகவும், அதைத் தான நேரிற் கண்டதாகவும் அதைப்பற்றிய விபரங்கள் தனக்குத் தெரியுமென்றும் எனக்குச் சொன்னார். அவரைக் குறுக்கு விசாரணை நடாத்தியும், கற்கள் விழுந்த விடத்தைச் சோதனையிட்டும் அகப்பட்ட தகவல்களையே இங்கு கூறுகின்றேன்.

## கிடைத்த தகவல்

பறக்கும் செங்கல் ஒரு அங்குல குறுக்களவுள்ள ஒரு செங்கல் வகையைச் சேர்ந்தது.

அது அநேகமாகப் பெரிய வீடுகள் உள்ளவிடங்களில் விழுகின்றது.

கற்கள் விழுந்தாலும் ஓடுகளில் விழுவதினாலோ, அல்லது விசையாக விழுவதினாலோ, கல்லுருவம் மாறி வெறும்மண்ணாகிவிடுகின்றன. ஓடுகளில் விழுவதினாற்போலும் அச் செங்கல் மறுகணம் தூளாகிவிடுகின்றது. இச் செங்கல் கீழே விழும்போது ஒருவித சத்தமோ அல்லது ஒளியோ இருப்பதில்லை.

## எங்கிருந்து வருகின்றன?

மேற்சொன்ன விபரங்கள் அகப்பட்டதும் அவை எங்கிருந்து வருகின்றன என்ற கேள்வி பிறந்தது. ஆகாயத்தில் வாயுமண்டலத்திற்கப்பால் கல் மண்டலம் இருப்பதாக முன்னொரு புத்தகத்தில் வாசித்திருந்தேன். அக் கற்கள் தவறிப்பூமியின் ஆகர்ஷண சக்தியினால் இழுபட்டு வருவதுமுண்டு. அப்படி விழும்போது வாயுமண்டலத்தில் உராஞ்சுவதினால் எரிவதுமுண்டு. அப்படி எரிவதினாற்றான் செங்கல் உருவத்தில் ஒருவேளை வரக்கூடுமென்று பேராசிரியர் கிருஷ்ணன் கூறினார்.

மின்சாரப்பெட்டிய வழியைத் தொடரும்! வீடுகள் சற்று உயரமாக விருப்பதினால் அவை விழுகின்றனவென்று சமாதானங் கூறலாம். ஆனால் அக்கற்கள் மின்சார சக்தி உடையனவாயிருப்பினும் வீட்டிற் கணித்தாகவிருக்கும் உயர்ந்த மரங்களில் விழாமல் வீட்டையே நோக்கி விழுவதற்கு ஒருவித நியாயமுமில்லை. ஆகவே ஆகாயத்திலிருந்து விழுவதாகச் சொல்லுவதற்கு

— நடமாடி —

ஒருவித ஆதாரமுமில்லை என்ற முடிவு ஏற்பட்டது. கல்லெறிதல் பேய் பிசாசுகளின் சேட்டைகளென்று சில முதியோர்கள் சொன்னார்கள். அவர்களின் கூற்றில் சில உண்மைகளிருந்தாலும் கிராமம் முழுவதற்கும் பிசாசின் சேஷ்டை பரவுவதற்குக் காரணமில்லை. அத்துடன் கற்கள் விழும்போது ஜனங்கள் கூடிவிட்டால் அவை விழுவதில்லை. கற்களுக்கோ அல்லது அவற்றுக்குப் பின்னால் நிற்கும் கர்த்தாவுக்கோ மனித உணர்வுண்டென்பது தெளிவாயிற்று. அப்படியென்றால் அந்த ஆசாமி எங்கிருந்து இந்த வேலையைச் செய்கின்றான்? இப்படியாகத் தலையை உடைத்துக் கொண்டிருக்குஞ் சமையத்திற் பத்திரிகைப் புலி சோணாசலத்தார் புதிய சரடு விட்டுக்கொண்டு வந்துசேர்ந்தார்.

இக்கற்கள் எங்கள் அரசாங்கத்தின் புதிய இரகசிய ஆயுதம் என்றும், அவற்றை அடிக்கடி பரீட்சித்துப் பார்க்கிறார்களென்றும் சொல்லி என்னை ஆச்சரியத்தில் மூழ்கவைத்தார். இலேசில் நம்புகிறவனா நான்! யுத்தக் காரியாலத்தைப் பேச்சுத் தந்தியில் கூப்பிட்டேன் சோணகிரியாரின் யூகத்தைத்தெரிவித்து அது உண்மையாக விருக்குமா வென்று கேட்டேன். யுத்தமந்திரி அதைமறுத்ததோடு நில்லாமல் அது உண்மை சற்றேனுமில்லாத வெறும் புரளியென்றும் அதைக்கேட்டு ஏமாந்த எனக்குப் பட்டை நாமமும் சாத்திவிட்டார். பிரச்சினையும் முன்னிருந்த நிலைமையிலேயே மறுபடியும் நின்றது.

## நேர்க்கண்டார்

தென்கோடியிலிருந்து பின்வரும் செய்தி எட்டியது. இரண்டொருகற்கள் விழத் தொடங்கியதும் இவ்விரகசியத்தை அறிய வேண்டுமென்று கங்கணம் கட்டிக் காத்திருந்த காசி என்பவர் முன்னேற்பாட்டின் படி பனை மரமொன்றில்ஏறத்தொடங்கினார். அரைப்பனைக்கு ஏறியதும் குதூகலத்துடன் கைப் பெருவிரலை உயர்த்தி வெற்றிச் சைகை காட்டினார். முழுவிபரத்தையும் அறிய எண்ணிப் போலும் சீக்கிரமாகத் தாவி மேலே ஏறிப் பனம் வட்டுக்குக் கிட்டச் சென்றது தான் தாமதம் கைதவற விட்டாரோ அல்லது பறக்குஞ் செங்கல் தான் அவரை அடித்ததோ தெரியாது தொப்பென்று கீழே விழுந்தார். விழுந்தவர் எழுந்திருக்கவில்லை. எவ்வளவோசிகிச்சை செய்தும் அவரிடமிருந்து அவரின்கதையை அறிய வியலாமற் போய்விட்டது.

நிலைமை இப்படியிருக்கவே, கிராமம் முழுவதிலும் வரும் அந்நியரைக் கண் காணிப்பில் வைக்கும்படி என் சகாக்களிடம் கேட்டுக்கொண்டேன். நாட்கள் கழிந்தன. கிராமமும் முன்னரிலும் பார்க்க அல்லோலகல்லோலப்பட்டது. ஒரு நாள் கதிரானின் கள்ளுக்கடையைக் கண்காணித்து வந்த சகாவிடமிருந்து பின்வரும் தகவல் கிடைத்தது. அந்நியர் போலு மிருவர் கள்ளுக்கடைக்கு வெளியில் வரும்போது ஒருவருக்கொருவர் வாக்குவாதமிட்டுக் கொண்டு சென்றனர். ஒருவர் பெரிய தனவந்தர்போற் காணப்பட்டார். மற்றவர் சாதாரண உடையணிந்திருந்தார். சாதாரண உடையுடன் நின்றவர் மற்றவரை நோக்கி "ஐயா இன்னும் இரண்டு நாட்கள் பொறுத்திருங்கள். உங்களுக்கு எந்த வீடு வேண்டுமோ சுண்டிப்பார்த்து எடுக்கும்படி நான் செய்கிறேன்" என்றார். பெரியவர், "ஏதோ உன் கெட்டித்தனத்தைப் பார்ப்போம்." இந்தா என்று கையில் கத்தையாக ஏதோ கொடுத்தார். "இவர்கள் இருவரில் எவரைத் தொடர்வது? சீக்கிர உத்தரவு. சாதாரண மனிதனைக் கவனி" என்பதே என் வேண்டுகோள். இரவு எட்டு மணி பின்வருஞ் செய்தி கிடைத்தது:" உங்கள் உத்தரவின்படி நடந்தேன்; வீண் போகவில்லை. மனிதன் இரவு நேரமாகப் பார்த்துச் சில செங்கட்டிகளை அளவாக உடைத்துத் தனது சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டான். பச்சை உடையே தரித்திருந்தான் அம்பலவாணரின் மாடிவீட்டிற் கணித்தாகவுள்ள ஆலமரத்தில் ஏறியிருக்கின்றான். சீக்கிரம் வரவும்." பின் சொல்வானேன் என் பட்டாளம் முழுவதும் ஆலமரத்தின் கீழ் நின்றன. மரத்திலிருந்தவன் கதிகலங்கிக் கீழிறங்கிவந்து தன் வயிற்றுப்பிழைப்பின் வரலாற்றைச் சொன்னான்: "பிரபுக்களே கேளுங்கள்! வீட்டுப் பஞ்சம் ஏற்பட்டதின் நிமித்தம வீட்டுச் சொந்தக்காரர் நிமிஷம் ஒரு வாடகையாகக் கூட்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)






அன்புமிக்க மருமக்களே,

அனைவருக்கும் வணக்கம். நேற்று முன்தினம் அச்சிட்ட புத்தகம் ஒன்றின் சில பக்கங்கள் கிடைத்தன. அதிற் சில நல்ல கதைகள் இருந்தன. அவற்றைப் படித்து நான் மகிழ்ந்தேன்.

உன் தொழிலை விட்டுத் தெரியாத புதுவேலையை மேற்கொள்ளலாகாது என்பதை விளக்கும் ஒரு கதையும் அதில் இருக்கின்றது. நீங்களும் அதனைத் தெரிந்துகொள்ள வேண்டுமென விரும்புகின்றேன். சரி, இனிக் கதையைப் படித்துப்பாருங்கள்:

ஒரு ஓநாயிடம் ஒரு கழுதை அகப்பட்டுக்கொண்டது. ஓநாய தன்னைப் புசித்துவிடும் என்று கழுதைக்குத் தெரிந்தது. அதைத் தவிர்க்க ஓர் உபாயம் செய்தது. தான் நொண்டுவது போல் நொண்டி நொண்டி நடந்தது.

"ஏனப்பா நொண்டுகிறுய்?" என்று ஓநாய் கழுதையைக் கேட்டது. "நான் நடந்துவரும் வழியில் என் பின்னங்காலில் ஒரு முள் தைத்தது. அதனுல் நொண்டுகிறேன். நீ என்னைப் புசிக்கப்போகிறுய். ஆனுல் உன் தொண்டையில் அந்த முள் சிக்கிவிடுமேஎன்று வருத்தப்படுகிறேன்" என்றது.

ஓநாய் சூழ்ச்சி அறியாமல், "அப்படியா?, உன் காலைக் காண்பி, நான் அந்த முள்ளை எடுக்கிறேன்" என்று கழுதையின் பின்னங்காலைத் தூக்கி தன் கண்ணைக் கிட்டவைத்துப் பார்க்க ஆரம்பித்தது.

இந்த வேளை எப்பொழுது வரும் என்று காத்துக்கொண்டிருந்த கழுதை தன் பலங்கொண்ட மட்டும் ஓநாயின் பற்கள் உதிரும்படி உதைத்து ஓட்டம் பிடித்தது.

ஏமாந்த ஓநாய், "ஆகா, என் தொழில் கொலைத்தொழில் மட்டுமே. அப்படியிருக்க எனக்குத் தெரியாத வைத்தியத் தொழிலில் நான் ஏன் பிரவேசிக்கவேண்டும். அதனுல்லவோ என் பற்கள் உதிர்ந்து வாயில் இரத்தம் வழிகிறது" என்று வருந்திற்று.

கேசரிமாமா

# கண்டீர்களா?

மே. 71 வி. கந்தவனம்

ஆ! என் உள்ளத்தில் நடமாடிக்கொண்டிருந்தஉன்னையா இழந்துவிட்டேன்? உனக்கு இக்கதி நேருமென்று நான் இதுவரை கனவிலுமெண்ணவில்லை. என்ன ஆச்சரியம்! என்னை விட்டுப் பிரிந்து விட்டாயா?

ஐயோ! அன்று யாழ்ப்பாணம் சென்றபொழுது நீ அக்கடைக்குள் இருந்து கொண்டு என் உள்ளத்தைக் கவர்ந்தாய். இன்று என்னுள்ளத்தை வருத்துகின்றுயே! இது நியாயமா? இனி நான் உன்னை எங்கு தேடுவேன்?

உனது உணவுக்காக நான் பட்ட பாட்டை என்னென்று சொல்வேன். அன்று உனக்கு நல்ல உணவு தேடச் சென்றபடியால் வீடு சேரத் தாமதித்து விட்டேன். அதற்காக என் பெற்றேரிடம் ஏச்சு வாங்கினேன். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு இப்போது எங்கு சென்றுயோ?

என் கண்ணே, கட்டிக் கரும்பே, என்னமுதே, நின்னை விட்டுப் பிரிந்து நான் உயிர் வாழ்வதெப்படி?

கடிதங்கள் எழுதும்போதும், கட்டுரைகள் எழுதும்போதும் என்னண்டை வந்து நீ உதவி புரிந்திடுவாய். இனி நான் என் செய்வேன். நீ இல்லாத படியால் கேசரி மாமாவுக்குக் கூடக் கடிதமோ, அல்லது கட்டுரைகளோ எழுதமுடியாமல் தவிக்கின்றேன். உன்னையடைந்த சந்தோஷமும் உன்னைப் பிரிந்த வாட்டமும் சரியாகிவிட்டன. உன்னைப்பெற்ற ஆனந்த மிகுதியினுல் அன்று கேசரி மாமாவுக்குக் கடிதமும் கட்டுரைகளும் எழுதியனுப்பியிருந்தேன். உன் நன்மையால் அவை யாவும் பிரசுரம் பெற்றன. இனி யார் எனக்குப் பாலர் பகுதிக்குக் கட்டுரைகள் எழுதவும் கதைகள் எழுதவும் உதவி புரியப் போகின்றூர்களோ?

என் இரத்தினமே நின்னைப் பிரிந்தமையால் எழுத்துக் கூடச் சரியாக எழுத முடியவில்லையே! இது வரை காலமும் என் பின்னே திரிந்ததுமன்றி எனது சட்டையையும் பிடித்துத் திரிந்த நீ இப்போது என்னைப் பிரிந்து விட்டாயே! அந்தோ! எனது துயரையடக்க நீ என் கண் முன் தோன்றமாட்டாயா?

நின்னைப் பெற்ற நாள் தொடக்கம் எனக்கிருந்த மரியாதையோ கணக்கற்றது. அனைவரும் உன்னைப் பார்த்து மகிழ்ந்தார்கள். என் நெஞ்சிலே பிரகாசித்துக் கொண்டிருந்த நீ இப்போது யார் நெஞ்சிற் பிரகாசிக்கின்றுயோ எனக்கெப்படித் தெரியும்?

அன்று காலை பாடசாலைக்குச் செல்லும்போது உன்னை ஒருவன் தன்வசப்படுத்தியதும் கோபத்தின் நிமித்தம் நான் அவனை ஏசி உன்னை மீட்டதும் உன் கண்கள் பார்த்தனவே. இவை யாவையும் எதற்காகச் செய்தேன்? உன் மீது கொண்ட பேரன்பு காரணமாகத் தானே!

அன்பர்களே! இன்னுமா உங்களுக்கு என் துயரம் விளங்கவில்லை? என்னை இவ்வளவு துயரத்துக்குள் ஆக்கிய என் 'பவுண்டன் பேனு'வை இழந்துவிட்டேன். என் செய்வேன்? யாராவது கண்டீர்களா?

## புதிய மருமக்கள்

மே.436. வை. கா. தனபாலசிங்கம், டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

மே.437. மு. கணபதிப்பிள்ளை, C/o க. முருகுப்பிள்ளை அளியவளை, பளை.

மே.438. த. சவுந்தரம், மே.439. கா. சவுந்தரம்மா, மே.440. ச. அரங்கநாயகி, மே.441. க. தங்கரத்தினம், மே.442 சி. பவளம், மே 443. ந. பொன்னம்மா, மே.444. பா. தங்கரத்தினம், மே.445. கோ. தங்கம்மா.

இவர்களின் விலாசம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பாடசாலை, மண்டூர்.

### பிறந்ததின வாழ்த்துக்கள்
### 25-2-51—3-3-51

மே 28. சு. பிரேமசம்பு; மே.70. வி. கணபதிப்பிள்ளை; மே.76. சி. செல்வத்துரை; மே 77. க. பராசக்தி; மே.123. ச. கமலாவதி; மே.127. பொ. புனிதவதி; மே.140. க. கனகராசா; மே 164. இ. மகேஸ்வரசர்மா; மே 175. இ. சரவணபவன்; மே 274. மா. அர்ச்சுனராசா; மே 286. தி இராஜேஸ்வரி; மே.295. இ. திருஞானம்பிகை; கி. 301. க. சிவகாமிப்பிள்ளை.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

# எனது நகரம்

மே.435 அ. வின்சென்ற் தங்கத்துரை

எனது நகரத்தின் பெயர் சாவகச்சேரி. எனது நகரம் முதன் முதலாகப் பற்றைகளாகவும் பனை மரங்கள் நிறைந்த காடாகவும் இருந்தது. காலஞ் செல்லச் செல்லப் பற்றைகளிருந்த இடங்களெல்லாம் திருத்தம் செய்யப்பட்டன. அப்படித் திருத்தம் செய்யப்பட்ட இடங்களில் வீடுகளும் பாடசாலைகளும் கடைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது தபாற்கந்தோர் வீதியிலுள்ள ஓர் இடத்தில் ஒரு பெண்பாடசாலையை அரசாங்கம் கட்டப்போகின்றது. முன்பு சிறிய நீதிநிலையம் இருந்த இடத்தில் இப்பொழுது மிகவும் அழகான ஒரு பெரிய கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. இரு படமாளிகைகளும் எனது நகரத்தில் இருக்கின்றன.

இப்பொழுது எங்களுடைய நகரத்திலே மின்சார நிலையம் கட்டப்பட்டிருக்கிறது. தெருக்களிலும், கடைகளிலும், வீடுகளிலும் மின்சார வெளிச்சம் கிடைக்கக்கூடிய வசதிகளைச் செய்கிறூர்கள்.

எங்களுடைய நகரத்தில் 'டெனிஸ்' பந்தாட்டம், கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் விளையாடுவதற்கான இடங்கள் உள. தபாற்கந்தோர் வீதியிலே உள்ள ஸ்ரீவள்ளி காப்பிக்கிளப்பிலே நல்ல தேநீரை அருந்துவதற்காக எங்கள் நகரவாசிகள் சிலர் அங்கு செல்லுவார்கள். எங்களுடைய நீதி நிலையத்திற்கு முன்னுல் இருக்கும் சரஸ்வதி புத்தகசாலையிலே புத்தகங்களும் ஈழகேசரி போன்ற பல பத்திரிகைகளும் விலைக்குக் கிடைக்கின்றன.

எங்கள் நகரத்திலே வைத்தியசாலை, புகையிரத நிலையம், சந்தை, நல்ல பள்ளிக்கூடங்கள், இப்படிப் பல வசதிகளும் இருக்கின்றன. எனது நகரம் இன்னும் வளர இடம் இருக்கின்றது.

## மருமக்கள் கடிதம்

கேசரிமாமா அவர்களுக்கு,

ஸப்தகிரீஸ்வரன் நமஸ்கரித்து எழுதிக்கொள்வது:

புராதன மலாயா என்ற விஷயத்தைப் பிரசுரித்து உதவியதற்காக நான் மிக மிகக் கடமைப்பட்டுள்ளேன். இதன் மூலம் தாங்கள் எனக்கு மிகுந்த உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஊட்டியிருக்கின்றீர்கள்.

நான் தமிழ் 6-வது வகுப்புவரை படித்துள்ளேன். அதற்குமேற் படிக்கவேண்டுமென எனக்கு அளவிலாத ஆசை. ஆனுல் என்ன செய்வது? இங்குள்ள பெரிய நகரங்களிற் கூட 5-வது 6-வது வகுப்பிற்கு மேல் இல்லை.

நான் ஒரு தமிழ் எழுத்தாளனுக வேண்டுமென்பதே எனது ஆசையாகும்.

அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு மலாய் நாட்டில் மார்க்கம் கிடையாது. சிறிது சிறிதாக உயர்ந்து வரலாமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நிற்க,

ஈழகேசரி பாலர் பகுதி அங்கத்தினர்கள் பலரிடம் இருந்து கடிதங்கள் வந்திருக்கின்றன. மலாய் நாட்டைப்பற்றியும், வேறு பல கேள்விகளையும் கேட்டு என்னைத் திணற அடித்துவிட்டார்கள்! இலங்காதேசிக்கும், சிங்கப்பூருக்கும் கடிதத் தொடர்பு வைத்துக்கொள்ள உதவி புரிந்த தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ். சப்தகிரீஸ்வர சர்மா
228 கர்லாங் வீதி,
சிங்கப்பூர்.

அன்புள்ள கேசரி மாமாவுக்கு!

நமஸ்காரம். பலநாட்களாகச் சந்திக்கமுடியவில்லை. மன்னிக்கவும்.

சென்ற 11-2-51 ஈழகேசரி பாலர் பகுதியில் வெளியான 'கண்ணிழந்த கந்தன்' நன்றுயிருக்கின்றது. கதியற்ற கந்தன் கடவுளாற் காப்பாற்றப் பட்டான் என்றே சொல்ல வேண்டும். சபாஷ்! நமது பாராட்டுக்கள்.

"விவாத மேடை" ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று ஏற்கனவே தங்களை வேண்டியிருந்தேன். அதற்கு "விரைவில் அமைப்போம்" என்று பதில் கூறி உறுதி யளித்தீர்கள். ஒவ்வொரு முக்கிய விஷயங்களையும் விவாதிப்பதாலே எவ்வளவோ விஷயங்களை அறியலாம். எனக்குத் தெரியாதது அடுத்தவருக்குத் தெரிந்திருக்கலாம். அவருக்குத் தெரியாதது மற்றவருக்குத் தெரிந்ததாயிருக்கலாம். இவைகளெல்லாம் விவாதமேடையிற் சந்திப்பின் யாவையும் எல்லோரும் அறியலாமல்லவா? விவாதமேடையில் விவாதிக்கும் அன்பர்களுக்கு உற்சாகமாகவும் இருக்கும்.

வேத—தணிகாசலம் மே.9.
கம்பளை, 15-2-51

## அறிந்துகொள்ளுங்கள்

| | | சதுரமைல் |
|---|---|---|
| பூமியின் பரப்பு | ... | 19,69,50,000 |
| நீர்ப்பரப்பு | ... | 13,94,00,000 |
| நிலப்பரப்பு | ... | 5,75,10,00 |
| **ஐம்பெருங்கடல்** | | |
| பஸிபிக் சமுத்திரம் | ... | 6,38,01,000 |
| அத்திலாந்திக் சமுத்திரம் | ... | 3,18,30,000 |
| இந்து சமுத்திரம் | ... | 2,83,56,000 |
| வட சமுத்திரம் | ... | 54,40,000 |
| தென் சமுத்திரம் | ... | 11,45,000 |
| **ஐம்பெருங் கண்டங்கள்** | | |
| ஆசியா | ... | 1,69,90,000 |
| அமெரிக்கா | ... | 1,53,14,000 |
| ஆபிரிக்கா | ... | 1,15,00,000 |
| ஐரோப்பா | ... | 38,72,000 |
| அவுஸ்திரேலியா | ... | 29,74,000 |

## ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

..........................................

பிறந்ததிகதி: ..........................................

..........................................
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

# கலியாணக்கடிதம்

அன்புள்ள குமாரசுவாமிக்கு: சுகம், அதற்கொரு குறையுமில்லை. ஆனால் மனசில் உள்ள கவலைக்குத்தான் அளவில்லை.

நான் வாலிப சமூகத்தைச் சேர்ந்தவன். அதனால்தான் வாலிப சமூகத்துக்கு நேரும் அவமானங்களைக் கண்டு மனம் பதறுகின்றேன்.

ஆகா! நம் சமூகத்தைப் பற்றி யார் நம்புகிறார்கள்? நம் மன அடக்கம், நேர்மை இவை பற்றி எல்லாருக்கும் சந்தேகமே. இல்லாவிட்டால் ஆண்களுக்குத் தனிக் கல்லூரி; பெண்களுக்குத் தனிக்கல்லூரியென்றெல்லாம் ஏன் ஏற்படுத்துகிறார்கள்?

ஆம்; நம்மை நம்புவதற்குப் பெரியோர்கள் தயாராயில்லை. இது நமக்கு எவ்வளவு அவமானம்?

அன்றொருநாள் வீட்டிற்கு வந்ததும் வராததுமாய், 'என்னடாப்பா! உன்னாலே பெரிய தொந்தரவாயிருக்கிறது' என்று கோபித்தாரம்மா.

"அதென்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"அன்னம்மாள் வந்திருந்தாள். தன் மகள் பூமாதேவியை உனக்குக் கலியாணஞ் செய்து வைக்கவேணுமாம்..." என்றார்.

"கலியாணமென்றால் விளையாட்டா?" என்று முணுமுணுத்தேன்.

"எல்லாம் சொன்னேன்; அவள் எங்கே கேட்கிறாள். 'கட்டாயம் பூமாவைத் தான் கலியாணம் பண்ணிக்கொள்ள வேணும். என்பாடு பெரிய கஷ்டமாயிருக்கு' என்றாள்......"

"என் சீதாவின் வீடும் இவர்களைப்போலத்தானே...?"

"அவர்களுக்கு அவ்வளவு கஷ்டமில்லையாம். ஏதோ வங்கியிலிருந்து பிரதி மாதமும் பணம் வருகிறதாம். இங்களுக்கு அதுகூட இல்லையாம்.— என்ன சொன்னாலும் அவள் கேட்கிறாளில்லை, 'எப்படியும் உதவி செய்யவேணும்' என்று விட்டுப் போகிறாள்..."

"இதென்ன தொல்லை?" என்று எரிச்சல் வந்தது. "அது போகட்டும்! இனி என்ன செய்யலாமென்று நீ நினைக்கிறாய்?" என்று கேட்டேன்.

"எனக்கு ஒன்றுமேதோன்றவில்லை. இரண்டு வீட்டாரும் நமக்கு ஒரேமாதிரித்தான்! இரண்டு வீட்டாரும் ஒரே நிலையிற்றான் இருக்கிறார்கள், ஏதாவதொன்றைக் காப்பாற்றித்தான் ஆகவேணும்....!"

"ஒன்றைக் காப்பாற்றினால், மற்ற வீட்டாரின் சாபங்களைச் சுமப்பது யார்?" என்று கேட்டேன்.

தாயார் பேசவில்லை.

நான் யோசனையில் மூழ்கிப் போனேன். பூமாவின் உருவமும், சீதாவின் உருவமும் மனக்கண்முன் மாறிமாறி வந்தன. "நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்றாள் பூமா. "எனக்கு முதலில் 'ஓம்' என்று சொல்லிவிட்டு இப்போது ஏமாற்றப் பார்க்கிறீர்களா?" என்றாள் சீதா. அவளை மறைத்துக்கொண்டு பூமா, "சீதாவின் அழகில் மயங்கித்தானே என்னைப் புறக்கணிக்கிறீர்கள்?" என்று விம்மலுடன் கேட்டாள்.

—அப்பப்பா! இதெல்லாம் உண்மையல்ல!

ஆனாலும் ஒரு முடிவுக்கு அவை வழிகாட்டின. "அம்மா பூமாவைக் காப்பாற்றியே தீருவேன் என்று அவள் தாயிடம் சொல்லு!" என்றேன்.

"சீதாவை விட்டுவிட்டா?"

"இல்லை. சீதாவைக் கலியாணஞ் செய்துகொள்வது. பூமாவைத் தங்கையாக ஏற்றுக்கொள்வது" என்றேன்.

அம்மா "போடாபோ!" என்று பரிகாசமாய்ச் சிரித்தார். அவருக்கே அவநம்பிக்கையென்றால், அன்னம்மாள் இதை ஏற்பாளா என்று யோசனையில் இறங்கினேன்.

* * *

சூரியன் சிவக்க ஆரம்பித்ததும், காரியாலயத்தை மூடிக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டேன். நேற்றைய விஷயத்தின் பரபரப்பு இன்னும் மனசைவிட்டு அகன்றபாடில்லை.

வழியிற்றான் பூமாவின் வீடிருந்தது. தெருவை நோக்கியபடி அவளும் வாசலில் நிற்பதைத் தூரத்திலேயே கண்டுகொண்டேன். என்னைப் பார்க்கத்தானோ, என்னவோ! துயரம் ததும்பிய முகத்தில், இளஞ் சிரிப்பையுங் காட்டிவிட்டு உள்ளே உடனே திரும்பிவிட்டாள் அவள்.

"பாவம்! இவளை நான் காப்பாற்றியே தீரவேண்டும்" என்று முடிவு கட்டிக்கொண்டேன்.

நான் செல்லும்போதே வீட்டில் அம்மாவும், அன்னம்மாளும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அவன்தான் இப்படிச் சொன்னானென்றால், அதை

○ பரணி ○

நீயும் வந்து சொல்கிறாயே எனக்கு" என்றாள் பூமாவின் அன்னை.

"ஏன்?" என்று என் அம்மா கேட்டார்.

"நீயும் இப்படிக் கேட்கிறாயே! வயசுவந்த பெண்ணை இன்னொருவர் வீட்டிலே கொண்டுவந்து விட்டால் உலகம் என்ன சொல்லும்?"

"அப்படியானால் நீங்கள் இருக்கிற வீட்டிலேயே இருங்கள். கணேசன் ஏதாவது உதவி செய்துவருவான்...."

"போதும், போதும், சாப்பாட்டுக்கு உங்களிடம் பிச்சை கேட்க வரவில்லை நான். ஏதோ செய்யக்கூடிய உதவியைச் செய்து பூமாவைக் காப்பாற்றுவீர்களென்று நினைத்தேன்..."

தாயார் ஒன்றும் பேசவில்லை!

எனக்குமனம் சகிக்கவில்லை. வேகமாய் உள்ளே போனேன்; "ஏன், மாமீ? ஏதோ தெய்வசித்தமாய் முதலிற் சீதாவுக்கும் எனக்கும் கலியாணம் நிச்சயமாகிவிட்டது. அதை இனி மாற்ற முடியுமா?" என்று கேட்டேன்.

"எல்லாம் மனமிருந்தால் முடியுமடாப்பா!" என்று சொல்லிவிட்டாள் பூமாவின் தாயார்.

ஒரு நிமிஷம் பொறுத்து, "அதை விட்டுவிடுங்கள் மாமி, ஒரு பெண்ணைக் காப்பாற்ற வேணுமென்றால் அவளைக் கலியாணம் செய்துகொள்வது தானா வழி. அவளுடைய அண்ணாவாக நான் இருப்பேன். பூமாவை என் தங்கையாக நான் நினைக்கிறேன். அவளை அழைத்துக்கொண்டு இங்கே வந்துவிடுங்கள். எப்படியாவது உங்களோடு சேர்ந்திருக்கவே எனக்கு ஆவல்..." என்றெல்லாம் மனம் விட்டுப் பேசினேன்.

அவையெல்லாம் வெறும் உளறல் தானா?—'ஆண்களின் சுபாவம் எனக்குத் தெரியாதா? என்று அன்னம்மாள் எண்ணுவதை அவள் முகம் பிரதிபலித்தது.

"இதென்ன பேச்சுத் தம்பி! பூமா சின்னப்பெண்ணா, என்ன? வயதுவந்தவள். அவளை இங்கே அழைத்துக்கொண்டுவந்தாலும், அல்லது அங்கேயிருந்தே உன் உதவியைப் பெற்றாலும் உலகம் தூற்றும்; நாங்கள் பழிக்குப் பயப்படுகிறவர்கள். அதற்குத் தப்ப ஒரேவழி கலியாணந்தான்! அதில் உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால், நான் எதைச் சொல்வது?"

இதற்கு நானோ, அம்மாவோ எதைச்சொல்லுவது?

சில நாட்களுக்குப் பின்னர் எனக்கும் சீதாவுக்கும் கலியாணம் ஆயிற்று.

தினமும் பூமாவின் நினைவு எனக்கு வரும். கண்ணீர் துளிர்த்த அவள் முகத்தை எண்ணும்போது மனதில் வேதனை பெருகும்.

நான் அவளை நினைத்து உருகுவதாகச் சீதா வேறு சந்தேகிக்கத் தொடங்கினாள்.

இவற்றிலும் மேலாக எனக்கு ஒரு வழி பிறந்தது. எங்கிருந்தோ கோபாலன் என்றொரு வாலிபன் வந்துசேர்ந்தான். அழகு, குணம், பணம்-எல்லாம் அவனுக்கிருந்தன. அவனைப் பூமாவுக்கு மாப்பிள்ளை ஆக்கிவிட்டேன்.

"எப்படி நான் பூமாவுக்குச் செய்த உதவி?" என்று அன்னம்மாளிடம் கேட்டேன்.

"மிக நல்லதடா!" என்று அவள் முகம் மலர்ந்தாள்.

"என் வீட்டில் வந்திருந்தாலும் இதே உதவியை நான் செய்திருப்பேன். அதிருக்கட்டும் மாமி! உண்மையில் நீங்கள் உலகத்துக்குப் பயப்படவில்லை; என்மேல் அவநம்பிக்கைப்பட்டீர்கள் இல்லையா?"

"நீ குறை நினையாதே கணேசு! ... ... நான் ..." என்று விக்கினாள்

"உங்கள்மேல் எனக்கொரு கோபமும் இல்லை மாமி! இந்த ஆணாய்ப் பிறந்தவர்கள் இவ்விதம் நீங்கள் அவநம்பிக்கை கொள்ளும்படி நடந்துவருகிறார்கள். அப்படியிருக்க நீங்கள் என்னை எப்படி நம்புவீர்கள்?"

"உன்னுடைய பரிசுத்தமான மனதை நான் அறிந்துகொண்டேன் கணேசு! நீ பூமா மேல் தவறான எண்ணங்கொண்டிருந்தால், இன்னொருத்தனுக்கு அவளை மணஞ்செய்துவைக்க முயற்சிப்பாயா? என்றாள்.

பிறகு, "நீ எவ்வளவு நேர்மையாய் நடந்துகொண்டாய். எல்லா இளைஞர்களிடமும் நேர்மையிருக்குமென்று எவ்விதம் நான் நம்புவேன், முடியாதல்லவா?" என்றாள்.

நான் ஒன்றுமே சொல்லவில்லை. எதைச் சொல்வேன்?

ஆணாய்ப் பிறந்தவர்கள் தான் மனிதர்களாயிராமல், பேய்களாயிருக்கிறார்களே!

அன்புள்ள
கணேசன்


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கேமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[4221]



## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 743 Testy

இணுவில்
காலம் சென்ற வயிரவநாதர் பொன்னம்பலம் பெண் நாகரத்தினத்தின் ஆஸ்திக்கு.

இணுவில்
வயிரவநாதர் தம்பாபிள்ளை
தத்துவகாரன்

இணுவில்
1. பொன்னம்பலம் மகள் யோகராணி
2. வயிரவநாதர் பொன்னம்பலம்
3. தம்பாபிள்ளை சோமசுந்தரம்
எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 743-ம் இலக்க தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை, 1951-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 10-ந் திகதி (10-3-51) சனிக்கிழமை பிற்பகல் 4½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில்விற்கப்படும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று இணுவிலிறை "ஆனைவிழுந்தான்" நிலப்பரப்பு பதினாலு (14)ம், வடக்கெல்லைக் காணியின் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழி வாய்க்கால் தூர்வை உரித்தும் வடக்கேயிருக்கும் தென்னையும். எல்லை: கிழக்கு, உரும்பராய் ஊரெல்லை. வடக்கு, காசிப்பிள்ளை, பெண் சின்னம்மாவின் ஆதனம். மேற்கு, தத்துவகாரனுக்கும் பெண் பொன்னுவுக்குமுரிய ஆதனம். தெற்கு, கதிர்காமர் கார்த்திகேசுவின் ஆதனம். இதில் மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு நாலும் (4) அதற்குரிய வைகளும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,
15-2-1951 [4242]



## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
### 1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பகுதி பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை எம்மூலம் அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

[4222]

The
# EeLAKESARI
T'Phone No. 805
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India Burma & Malayan Union
Vol. 21 | Chunnakam, Sunday, Feb., 25. 1951 | No. 30

## இதய ஊற்று

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி வைத்தால் அந்த அறைக்குள் ஒருவரும் படுக்க முடியாது. 'எங்கே வைக்கிறது?' என்று பார்வதி கேட்டாள். சமையலறைக்குள் ஒரு பக்கத்தில் வைக்குமாறு லலிதா கூறினாள்.

மகாதேவனை அழைத்துக்கொண்டுபோய்த் தனது அறைக்குள் இருக்க வைத்துவிட்டு 'ஐந்து நிமிஷம் இருங்கள்; இதோ வந்துவிட்டேன்' என்று லலிதா வெளியே சென்றாள். மகாதேவன் தனியே விடப்பட்டான். மகாதேவனுக்கு நடப்பதெல்லாம் பெருந் திகிலாயிருந்தது. அங்கே ஒரு ஆண் மக்களுமில்லை. ஆண் வாடையே வீசாத ஒரு பிரதேசத்துக்குள் தான் வந்து அகப்பட்டுக்கொண்டேன் என்று பயந்தான்.

லலிதா வந்தவுடன் 'தான் போகவேண்டும்' என்று வற்புறுத்திக் கூறிவிட்டுப் போய்விடவேண்டும் என்று தீர்மானித்தான். இவன் இவ்விதம் சிந்தனைசெய்துகொண்டு நிற்கும்பொழுது ஜன்னலருகில் ஒரு நிழல் தெரிந்தது. திரும்பிப் பார்த்தான். அதுவும் ஒரு பெண். அவன் திரும்பிப் பார்த்ததும் அப்பாற் போய்விட்டாள். இதற்கிடையில் லலிதா வந்து சேர்ந்தாள்.

லலிதா கையில் ஒரு பார்சலுடன் வந்தாள். அதை மகாதேவனிடம் கொடுத்து, 'இவற்றை அணிந்துகொண்டு, தங்கள் ஈர உடுப்புகளைக் களைந்து போடுங்கள்' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றுவிட்டாள். மகாதேவன் நினைத்திருந்தபடி, அவளுக்குச் சொல்ல முடியவில்லை. அவன் தான் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு சொல்லுவதற்கு முன்னர், அவள் சென்றுவிட்டாளே. அவள் கொடுத்த உடுப்பை உடுக்காது, அவள் திரும்பவரும் வரைக்கும் வைத்திருந்து அவள் வந்தவுடன் சொல்லிவிட்டுப்போய்விடுவோமா? என்றுயோசித்தான். ஆனால், தனது உடுப்பும் மிகவும் ஈரமாயிருந்தது. சிறிது நேரத்துக்கு மாறி உடுப்போம். தனது உடுப்புக்கள் காய்ந்த பின்னர் செல்வோம் என்று எண்ணிக்கொண்டு அவளுடைய பார்சலை அவிழ்த்தான். அதற்குள் புதிய பட்டு வேட்டியும் பட்டுச்சட்டையும் இருந்தன. லலிதாவுக்கு இவைகள் எது? என்று ஆலோசித்த வண்ணம், தனது காற்சட்டையைக் கழற்றி வேட்டியை உடுத்தான். மகாதேவன் உடுப்பு மாற்றிவிடுவான் என்ற எண்ணத்தில் உள்ளே லலிதாவும் திரிபுரசுந்தரியும் நுழைந்தனர். ஈரக்களபீனத்தையும் கழற்றிக் காயப்போடுவோமா விடுவோமா? என்று ஆலோசித்துக்கொண்டு நிற்கும்பொழுது, அவர்கள் நுழையவே அந்த எண்ணத்தை முற்றாய்க் கைவிட்டுவிட்டான். அவசரமாக வேட்டியை உடுத்திக்கொண்டு சட்டையையும் மாற்றிக்கொண்டான்.

லலிதா, திரிபுரசுந்தரியையும் மகாதேவனையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திவைத்தாள். மூவருக்கும் பார்வதி தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். மகாதேவன் முதன்முதலாகக் கோப்பையிலே தேநீர் அருந்தினான்.

மகாதேவன் தனது சீவியத்திற் பட்டுவேட்டி உடுத்தறியான். அன்று முதன்முதல் உடுக்கவே, தான் ஏதோ ஆகாயத்திற் சஞ்சரிப்பவன்போல், அவனுக்குத் தோன்றியது. பட்டினுடைய தளுக்கும் மினுக்கும் அவனுக்கு ஒய்யாரமாக இருந்தது.

இராச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவரவர் தத்தம் இடங்களில் படுக்கச் சென்றனர். திரிபுரசுந்தரியும் பார்வதியும் ஒரு அறையிலும், லலிதா ஒரு அறையிலும், மகாதேவன் விறாந்தையிலும் படுத்தனர்.

மகாதேவனின் படுக்கை, பழைய கதைகளில் வரும் 'சப்ரகூடமஞ்சம்' போல இருந்தது. பலவகைச் சித்திரம் எழுதிய தலையணைகளும், அழகிய படுக்கை விரிப்பும், பச்சை வர்ணம் தீட்டிய நுளம்பு வலையும், ஜவ்வாது வத்திகளின் சுகந்த மணமும் சேர்ந்த மகாதேவனின் சிங்காரப் படுக்கையானது, தேவலோகம்போல் இருந்தது. தவிர, மகாதேவனுக்கு இவையனைத்தும் ஒரு புது அனுபவமாக இருந்தது.

பட்டுடுப்புடன், புதுச் சோபையுடன் விளங்கிய மகாதேவன் பூரண மகிழ்ச்சியுடன் படுக்கப் போனான். தன்னை இவ்வளவு விதமாக உபசரித்ததை நினைக்க அவனுக்கு லலிதாவின்மேல் பெரிதும் அன்பு உண்டாயிற்று.

லலிதா அறைக்கதவை உள்ளே பூட்டிக்கொண்டு படுப்பவள்; அன்று அறையைப் பூட்டாமற் சாத்தியபடியேவிட்டுவிட்டுப்படுத்தாள். (தொடரும்)

## பறக்கும் செங்கல்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கொண்டிருக்கிறார்கள். சில புத்திசாலிகள் ஒரு வண்டிக்கல் இழுத்துப்போட்டுவிட்டு வீடு கட்டித் தருவதாக அநேகரிடம் முன் பணமாக ஆயிரம் இரண்டாயிரம் சேர்த்துவிட்டு அப்பணத்தில் வீடு கட்டிக்கொடுக்கின்றனர். வீடு சம்பாதிப்பதற்குச் சாம பேத தான தண்டம் ஆகிய இராசதந்திரங்களைப் பிரயோகிக்க வேண்டியிருக்கிறது. ஆயிரம் இரண்டாயிரம் மூலதனம் உள்ளவன் முன் பணம் கொடுக்கட்டும். ஆனால் ஏழைகளென்ன செய்வார்கள்? அவர்கள் கட்சியை யார் எடுத்துரைப்பது? ஆகவே ஆயிரம் சாதிக்கும் ஒரு காரியத்தை நான் ஐந்து ரூபாயுடன் சாதித்தேன். "இதோ என் ஆயுதம்" என்று எறிந்தான் மிஞ்சிய செங்கற்களை. இப்பொழுது உங்களுக்குத் தெரிகிறதா பறக்கும் செங்கல் என்னவென்று?

## திருத்தம்

சென்றவார (18-2-51) ஈழகேசரியில் வெளியான 3651-ம் இலக்கக் கோட்டு விற்பனவு விளம்பரத்தில், 1951-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 25-ந் திகதி (12-3-51) திங்கட்கிழமை பிற்பகல் $4\frac{1}{2}$ மணி என்றிருப்பதை, 1951-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 12-ந் திகதி (12-3-51) திங்கட்கிழமை பிற்பகல் $4\frac{1}{2}$ மணி எனத் திருத்திக் கொள்க.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

## கொழும்புத் திட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பயிற்சிபெற்ற ஆட்பலம் அபரிமிதமாக இல்லை.

உற்பத்திப் புனருத்தாரணத்திற்கு ஒரு பரந்த திட்டம் வகுத்து நவீன முறைகளை உபயோகித்து உற்பத்தியைத் துரிதமாக விருத்தி செய்யாவிட்டால் மளமளவென்று பெருகிவரும் சனத்தொகையின் வாழ்க்கைத்தரம் குறையும்.

1950-ம் வருடம் ஜனவரி மாதம் கொழும்பிற் கூடிய சாம்ராச்சிய மந்திரிகள் இந்த உண்மைகளை நன்கு உணர்ந்துதான் சாம்ராச்சிய ஆலோசனைச் சபை ஒன்றை நிறுவினார்கள். முதலாவது முறையாக அச் சபை ஸிட்னியில் மே மாதம் கூடியது. கூட்டத்திற்கு தெற்கு, தென்கிழக்கு ஆசியாவிலுள்ள பிற சாம்ராச்சியத்திற் சேராத நாடுகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அதன் பின் லண்டனில் மீண்டும் இரண்டாவது தடவையாக இச் சபை கூடியது. இந்தக் கூட்டத்திற் சாம்ராச்சிய நாடுகள் சமர்ப்பித்த ஆறு வருடத் திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இந்த லண்டன் கூட்டத்திற்கு பர்மா, தாய்லாந்து, இந்தோ-சீனம், இந்தோனேஷியா ஆகிய நாடுகளும் பங்கெடுக்க அழைக்கப்பட்டன.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் இப் பிரதேசத்திலுள்ள நாடுகள் தயாரித்துச் சமர்ப்பித்திருந்த ஆறு வருட அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் வரையப்பட்டுள்ளன. உண்மையாகவே இத் திட்டங்கள் ஏற்கனவே அந்தந்த நாடுகள் விரிவாகத் தீட்டி வைத்திருந்தவை. வேளாண்மைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாகக் கைத்தொழில் அபிவிருத்தியும் இடம் பெறுகின்றது. இவ்விரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்தே முன்னேறும்.

உதாரணமாக, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை நாடுகளில் நீர்வீழ்ச்சி மின்சார சக்தியை நீர்ப்பாசன வேலைகளுடனும், நதிப் பிரவாகப் பள்ளத்தாக்குப் பூமிகளைச் செழிப்புறச் செய்வதற்கான வெள்ளத் தடுப்புத் திட்டங்களுடனும் இணைக்கும்படியாகத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஸட்லெஜ் நதி சம்பந்தமான ஒரே ஒரு திட்டத்திற்கு மட்டும் சுமார் 67 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.

இந்தக் கொழும்புத் திட்டத்திற்குச் சுமார் 2,667 கோடி ரூபாய் செலவாகும். சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் தம் தேச அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியைக் கூடியவரையிலே தம் தேசத்திலிருந்தே திரட்ட முயற்சி செய்யும். என்றாலும், வெளியுதவி தேவைப்படும் என்பது தெளிவான விஷயம். இவ் விஷயத்தில் அமெரிக்கரின் ஆதரவு கிட்டும்போலிருக்கிறது.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 3683-ம் இலக்க வழக்கில் 1951-ம் ஆண்டு தைமாதம் 13-ந் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1951-ம் ஆண்டு பங்குனிமாதம் 31-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

தும்பளை
சுப்பர் சின்னையா
வழக்காளி

புலோலி கிழக்கு
ஏரம்பு நாகலிங்கம்
எதிராளி

### ஆதனங்கள்

1. புலோலி கிழக்கு மழுவராய குறிச்சியிறை. திசிரி கிழக்கு, நிலப்பரப்பு $24\frac{1}{4}$. இது யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 8106-ம் இலக்க வழக்கில் அணைபட்டிருக்கும் 1913-ம் ஆண்டு ஆனிமாதம் 22-ந் திகதியைக் கொண்ட 2640-ம் இலக்கப் படத்தின்படி நிலப்பரப்பு 25 குளி $\frac{7}{32}$. இதில் 10-ம் துண்டுக்கு நிலப்பரப்பு 8. குளி $6\frac{2}{32}$. பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு, வல்லியப்பர் தாமுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு, தாமு கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரருக்குடைய ஆதனம். தெற்கு, மூத்ததம்பி வடிவேலுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும்.

2. புலோலி கிழக்கு சௌரி பாகுதேவன் குறிச்சியிறை திசிரி நிலப்பரப்பு $19\frac{3}{4}$. மேற்படி வயல் நெற்பரப்பு 10. இப்பிரிவுகளில் ஒரு $\frac{5}{8}$ பங்கு ஆட்சிப்படிக்கு நிலப்பரப்பு 16. குளி $9\frac{3}{16}$. எல்லை: கிழக்கு தாமு சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு தாமு கணபதிப்பிள்ளையின் உரிமைக்காருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் அடங்கலிற் சொரியலாய் $\frac{1}{8}$ பங்கு.

3. புலோலி கிழக்கு மழுவராய குறிச்சியிறை. குஞ்சுக்கலட்டி, நிலப்பரப்பு $6\frac{7}{8}$. எல்லை கிழக்கு சேதர் பெண் தங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு, எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு, தாமு இராமசாமிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு, தாமு சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலத்தில் சொரியலாய் $\frac{5}{6}$ பங்கும் வடக்குப்புறமாகவும் இக்காணிக்கு வடக்கெல்லையிலும் இருக்கும் குஞ்சுக்கலட்டி என்னும் ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் $\frac{5}{12}$ பங்கும்.

4. ஷை இறை. குஞ்சுக்கலட்டி. நிலப்பரப்பு $12\frac{1}{2}$. எல்லை கிழக்கு சதாசிவம் இளையதம்பிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கும் மேற்கும் தெற்கும் எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதிலும் சொரியலாய் $\frac{1}{8}$ பங்கும் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலுரித்தும்.

5. புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன் குறிச்சியிறை மாதனை வடல் நெற்பரப்பு $45\frac{1}{4}$. இதில் ஆட்சிப்படி தென்கிழக்குப்புறமாக நெற்பரப்பு 6. எல்லை கிழக்கு, கந்தையாபெண் செல்லமுத்தவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு, பரமநாதர் முருகேசுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு, கதிர்காமர் தம்பையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு, சபாபதிப்பிள்ளை கைம்பெண் செல்லம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{1}{4}$ பங்கும்.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோலி கிழக்கு,
24-1-1951 [4243]

## சுத்த சன்மார்க்க மகளிர் இல்லம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்த பின்னரே இடம்கோலப்படுதல் நன்று. இவ் விட வசதியானது எமது சகோதரர்களான ஆண்பாலாரினுற்றான் தெரிவுசெய்யப்பெறுதல் உசிதமாகும்.

தென்னிலங்கையில் இம் மகளிர் இல்லத்தை அமைப்பதற்கான நிலங் கிடைத்தல்கூடும். பொருளுதவிகளும் அதிகமாகக் கிடைக்கலாம். யாழ்ப்பாணத்தில் ஒரு தாபனமும் தென் இலங்கையில் ஒரு தாபனமும் இருப்பது உகந்ததென்ற அபிப்பிராயமும் இருந்து வருகிறது.

யாழ்ப்பாணத்தை விட்டு நகர்வதற்கு விருப்பமில்லாதவர்க்கு மாத்திரமே யாழ்ப்பாணத்து நிலையம் பயன்படும். நில வசதி கிடைப்பின்—இந்த முயற்சியானது—யா—பெ—ஊழிய சங்க அங்கத்தவரான சகோதரிகளினுற்றான் முயற்சிக்கப்பட்டு வருகின்றது. இவ் வருடத்திற்றனே இம்மேலான பணியானது எம்மனோரால் மேற்கொள்ளப் பெறுதல் வேண்டும். இம் மேலான தொண்டிற் பங்குபெற முன்வருபவரான சகோதரிகளின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம். பொறுப்புவாய்ந்த இம் மேலான கடமையை நிறைவேற்றுவது இலகுவான காரியமல்ல. எனினும் ஊக்கமது கைவிடேல் என்ற வாக்கைக் கொண்டு ஒழுகுவோமாக. இப் பணி புரிவதற்காகச் சகோதரிகளிடத்தே காணப்படுவதான ஆர்வத்தைச் செயலிலே தான் காணவேண்டும். இக் கருமத்தில் அக்கறையும் ஆர்வமும் உடையவரான பெண் மக்களின் சேவைகள் யாவும் ஒன்றுசேர்ந்து திரண்டு உருவாகப் பெறுதல் வேண்டும். இத் தாபனம் சம்பந்தமான சகல விபரங்களும் எம்மிடத்தில் உள. யாவும் ஒரு முற்றுக்கு வந்தபின்னரே வெளியிடுவது நன்று.

விபரங்கள் வேண்டின் பெண்கள் ஊழிய சங்கத் தலைவி மா. மங்களம்மாள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்: 'சாந்தி நிகேதனம்', பி. எ. தம்பி லேன், வண்ணார்பண்ணை.

யாழ்ப்பாணம் - மயிலிட்டி தெற்கு, திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில்
1951-ம் ஆண்டு பெப்ரவரி மீ 25உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப் பெற்றது.